# செந்தமிழ்

தொகுதி - 73 ஜுன் 1979 பகுதி - 2

மதுரைத் தமிழ்ச் சங்க இதழ்

ஆசிரியர்:

டி. பி. எம். பெரியசுவாமி, எம். எல். ஏ.,

# உள்ளுரை

| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | திருத்தக்க தேவரும் கம்பரும்<br>ரா. ராகவையங்கார் | 1 |
| 2. | காலத்தின் கோலம்<br>புலவர்.இராமசாமி | 9 |
| 3. | சீனத்துப்பேரறிஞன்<br>பழநி .அரங்கசாமி | 14 |
| 4. | சாளுவத் திருமலைராயன்<br>புலவர். திருமேனி நாகராசன் | 19 |
| 5. | இந்திய விடுதலைப் போரில் மதுரை நிகழ்ச்சி<br>செ. செல்வின்குமார் | 26 |
| 6. | நாட்டுத் தெய்வங்கள்<br>க. சின்னப்பா எம்.ஏ., | 29 |
| 7. | குருதிப்புனல்<br>இரா. இராதாகிருஷ்ணன் | 34 |
| 8. | செய்திக்கதிர் | 40 |
| 9. | சங்கச் செய்திகள் | 44 |

# திருத்தக்க தேவரும் கம்பரும் *

ரா. ராகவையங்கார்

இவர்கள் இருவரும் தமிழிற் பெருங்காப்பிய நூல்கள் இயற்றி மிகச் சிறந்த புகழ் படைத்த புலவர் பெரு மக்களாவர். துறையடுத்த விருத்தத் தொகைக் கவிகளாற் றொடர்நிலைச் செய்யுளை வளம் பெறப் பாடுதலில் இவர்களுடைய பேராற்றல் அளத்தற்கு அரியதேயாகும். இவருள் திருத்தக்கதேவர் பாடியது சீவக சிந்தாமணி என்பது கம்பர் பாடியது இராமவதாரமென்பது.

இவ்விரு பெரும் புலவர்களுடைய அறிவின் ஒற்றுமை வேற்றுமைகளை ஆய்ந்தறிதற்கு இவ்விரண்டு நூல்களுமே உற்ற கருவிகளாவன. சீவகன் கதைக்கும்,சீராம கதைக்கும் சரிதையினியல்பு பற்றி நோக்குமிடத்துச் சிறிய உவர்க் குட்டத்துக்கும் பெரிய பாற் கடற்குமுள்ள வேற்றுமை புலனாகும். சீவகன் கதை யாண்டுஞ் சிற்றின்பமே, பெரும்பான்மை பயின்று வருகிறது.

சீராம காதை அறம் பொருளின்பம் வீடு என்னும் நாற் பொருளும் மலிந்து இயல்வது. இக் காப்பியங்களின் தலைவர்களை நோக்குமிடத்துச் சீவகன் பல தாரங்களை மணந்தவனாவன். சீராம மூர்த்தி ஏகதார மகா விரதனாவன். சீவக சரிதையில் இரண்டோரிடங்களில் வாழ்வும் தாழ்வும் கலந்து, இன்பச் சுவையும் துன்பச் சுவையும் காணப்படினும் பெரும்பாலும் கதையினைச் செல்வவாழ்க்கையிலே கொண்டு செலுத்தலாற் சுவையின்றாவது

சீராம காதைக்கண்ணே யாண்டும் வாழ்வும், தாழ்வும் பற்றி இன்பமும் துன்பமும் விரவி வருதலிற் சுவை மிகுதி பயக்கின்றது. இன்னோரன்ன சரித்திர இயல்பு பற்றி இவ்விரண்டு நூல்களுக்குள் உயர்வு தாழ்வு காண்டல் எளிதேயாகும். ஆதலால் சரித்திர இயல்பினை விடுத்து, இவ்விரு பெருங் காப்பியங்களையும் நன்றியற்றிய இவ்விரு நூலாசிரியருக்குள் புலமைத்திறன் பற்றியுள்ள ஒற்றுமை வேற்றுமைகளையே யான் இவ்விடத்தாராயப்புக்கேன்.

இவ்விரு புலவர்களும் காலத்தானுங் கொள்கையினானும் வேற்றுமைப் பட்டவர்களேயாயினும் புலமை எய்தியது தமிழ்க் கல்வியிலேயாதலால் இவர்கள் அம் மொழியிற் கற்ற பெரு நூல்களெல்லாம் பழைய சங்க நூல்களேயாகுமென்று துணியலாம்.

---

* செந்தமிழ் தொகுதி 4—பகுதி 1

இவ்விருவர் வாக்கிலும் திருக்குறள், புறநானூறு, அகநானூறு முதலிய பழைய நூல்களின் அரிய வழக்குகள் பல விரவியிருத்தலானே ஈதறியப்படும். இவ்விருவரும் எடுத்தாண்ட சங்க நூல் மேற்கோள்களை இங்கு ஒவ்வொன்றாக எடுத்துக் காட்டப் புகின், மிக விரியுமாதலால் ஒரு சிலவே கூறிச் செல்வேன். சிந்தாமணிக்கண்,

''வேட்டார்க்கு வேட்டனவே போன்றினிய வேய் மென்றோள்''
(குணமாலை -192)

என்பது

''வேட்ட பொழுதி னவையவை போலுமே
தோட்டார் கதுப்பினா டோள்'' (1105)

என்னுந் திருக்குறளையும்;

''கண்ணினா லின்று கண்டாங் கூற்றினைக் காமர் செவ்வாய்

... ... ... ... ...

பெண்ணுடைப் பேதைநீர்மைப் பெருந்தடங் கண்ணிற்றம் மா''
(இலக்கணை 81)

என்பது

''பண்டறியேன் கூற்றென் பதனை யினியறிந்தேன்
பெண்டகையாற் பேரமர்க் கட்டு'' (1083)

என்னுந் திருக்குறளையும் கொண்டு வந்தனவாதல் அறிக. இவ்வாறு முழு முழுத் திருக்குறளையும் கொண்டு வருவன இந்நூலுண் மிகப் பலவாகும். இவையன்றி ஒவ்வோர் திருக்குறளிற் குறித்த உவமை பற்றி வருவனவும் பல உள.

''பெரும்பார வாடவர்போற் பெய்பண்டந் தாங்கி''
(முத்தி-186)

எனப் பகட்டிற்கு ஆடவரை உவமித்தது ''மடுத்த வாயெல்லாம் பகடன்னான்'' (திருக்குறள் -624) என்பது கொண்டு அறிக. ''போதுவாய் திறந்த போதே பூம்பொறி வண்டு சேர்ந்தாங், கூதுமே மகளிர்க் கொத்த போகமு மன்ன தொன்றே'' (கேமசரி-379) என்பது 'மலரினும் மெல்லிது காமம்' (1289) என்னுந் திருக்குறட் கருத்தினை விளங்கவுரைத்ததாம்.

''வாய்ப்படுங்கேடு மின்றும் வரிசையி னரிந்து நாளுங்
காய்த்தநெற் கவளந் தீற்றிற் களிறுதான் கழனி மேயின்

வாய்ப்பட லின்றிப் பொன்றும் வல்லனாய் மன்னன்
கொள்ளின்''
(முத்தி. 309)

என்பது,

''காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வில்லதும் பன்னாட் காகும்
நூறுசெறு வாயினுந் தமித்துப் புக்குணினே
வாய்புகு வதனினுங் கால்பெரிது கெடுக்கு
மறிவுடை வேந்த னெறியறிந்து கொளினே'' (184)

என்னும் புறப்பாட்டையும்

''நெல்லுயிர் மாந்தர்க் கெல்லா நீருயி ரிரண்டுஞ் செப்பிற்
புல்லுயிர்...... மன்னர் கண்டாய் நல்லுயிர்......''
(முத்தி. 310)

என்பது,

''நெல்லு முயிரன்றே; நீரு முயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்'' (186)

என்னும் புறப்பாட்டையும் கொண்டுவந்தன. இவை போல வந்தன பிறவுங் கண்டு கொள்க. இனி, இராமவதாரத்தில்,

''ஊருணி நிறையவும் முதவு மாடுயர்
பார்கெழு பயன்மரம் பழுத்தன் றாகவுங்
கார்மழை பொழியவுங் கழனி பாய்நதி
வார்புனல் பெருகவு மறுக்கின் றார்கள்யார்'
(அயோத்தி-மந்திரப் 82)

என்பது,

''ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் திரு'' (215)

''பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வம்
நயனுடை யான்கட் படின்'' (216)

''கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு'' (211)

என்னுந் திருக்குறள்களை யுட்கொண்டு எழுந்தது என்று துணியத் தகும்.

பேரறிவாளனும், நயனுடையானுமாகிய இராமன் அரச்செல்வம் எய்தல் ஊருணி நிறைதல் போலவும் பக்கத் துயர்ந்த பயன்மரம்

பழுத்தது போலவும் கார்மழை பொழிதல் போலவும் கழனி பாய்ந்து பெருகல் போலவும் எல்லாரானும் தத்தமக்கு வரும் நன்மையாகக் கொண்டு விரும்பப்படும் என்றதாம். இதன்கண் நதி பெருக லொழித்து மற்றை மூன்றுந் திருக்குறளைக் கொண்டு நின்றன.

''மானநோக்கிற் கவரிமா வனைய நீரார்
என்பது (அயோத்தி- மந்திரப்-7)

''மயிர் நீப்பர் மானம் வரின்'' (969)
'மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்ன
என்னுந் திருக்குறளைக் கொண்டு வந்தது.

''உரைசெயற் கெளிதுமாகி யரிதுமா
மொழுக்கி னின்றான்''
(கிட்கிந்தை அரசியல். 44)

என்பது

''சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல்''

என்னுந் திருக்குறளைக் கருதி வந்தது. இதன்கண் உரை செயற்கு என்பதனை ஒருசொல்லாகக் கொள்ளாது உரைக்கு செயற்கு எனப் பிரித்து உரைக்கு எளிதுமாகிச் செயற்கு அரிதுமாம் என இயைத்துரை கொள்க.

''கொடுப்பது விலக்குகொடி போயுனது சுற்ற
முடுப்பதுவு முண்பதுவு மின்றிவிடு கின்றாய்''
(பால—வேள்வி· 83)

என்பது,

''கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ
முண்பதூஉ மின்றிக் கெடும்'' (166)

என்னுந் திருக்குறளைப்பற்றி வந்தது. இவை போல வந்தன பலவுள. கம்பர் திருக்குறளை 'எழுதுண்ட மறை' என்று வழங்கலால் அவருக்கு அந்நூற்கண் உள்ள நன்மதிப்பினை எளிதிலறியலாகும். இனிக் கிட்கிந்தா காண்டக் கார்காலப் படலத்து

''காலமறி வுற்றுணர்தல் கன்னலள வல்லான்
மாலைபக லுற்றதென வோர்வரிது மாதோ''
என்பது

''நிலனும் விசும்பு நீரியைந் தொன்றிக்
குறுநீர்க் கன்ன லெண்ணுந ரல்லது
கதிர்மருங் கறியா தஞ்சுவரப் பாஅய்த்

தளிமயங் கின்றே தண்குர லெழிலி'' - (43)

என்னும் அகப்பாட்டினையே கருதிவந்தமை கண்டு கொள்க. கம்பர் கன்னல் என்றது குறுநீர்க்கன்னலை. குறுநீர்க்கன்னல் என்பது அளவு பட்ட நீரினையுடைய நாழிகை வட்டில்; ஒரு கடாரத்து நீரிலே ஓர் நுண்ணிய துளையுடையதோர் வட்டிலையிட்டு அதன் கண் நீர்புகுவது பற்றி நாழிகை யளப்பதோர் கருவியாகும். சூர்ப்பநகைப் படலத்து

''சேற்றவளை தன்கணவ னருகிருப்பச் சினந்திருகிச்
சூற்றவளை வயலுழக்குந் துறைகெழுநீர்
வளநாடா''

என்பது

''கதிர்க்கோட்டு நந்தின் சுரிமுக வேற்றை
நாகிள தவளையொடு பகன்மணம் புகூஉ
நீர்திகழ் கழனி நாடுகெழு பெருவிறல்'' (266)

என்னும் புறப்பாட்டைக் கொண்டு கூறிய தென்றுணரப்படும். புறப் பாட்டுரையாசிரியர் இப் பாடத்தினை எடுத்தோதி ''நந்தி னேற்றை நாகிளந் தவளையுடனே தத்தம் இனத்தொடு பகன் மணம் புகூஉம் எனினுமமையும்'' என்றார். இவ் வுரைக்குத் 'தத்தமினத்தொடு' பாடத்திலில்லாமல் வருவித்ததாம்.

இங்ஙனம் வருவித் துரையாது இப் பாடத்தின் நேர் பொருளே கொண்டு கம்பர் கூறியுள்ளாரென்று துணியப்படும். இவ்வாறு சங்க நூல் வழக்குப்பற்றி வருவன இராமாவதாரத்து மிகப்பலவாகும். இவற்றால் திருத்தக்கதேவருக்கும் கம்பருக்கும் சங்கம் மருவிய பழைய பெரு நூல்களிலெல்லாம் நல்ல தேர்ச்சி யுண்டென்று கொள்ளப்படும்.

பண்டைத் தமிழ் நூற் பயிற்சி இருவர்க்கும் ஒத்ததென்று துணியப்பட்ட விடத்தும் கம்பருக்குச் சிந்தாமணி யாரினும் சிறந்த-தோரேற்றமுள்ளது. அஃதாவது கம்பர் சிந்தாமணியார் பேரறிவை யும் நன்கறிந்தவராவார். சிந்தாமணியார் கம்பருக்கு முற்பட்ட காலத்தவராதலால் சிந்தாமணியாரோ, கல்வியிற் பெரியவராகிய கம்பரது விழுப்பேரறிவையறியார்.

கம்பர் சிந்தாமணி தமிழ் மக்களாற் பெரிதும் போற்றப் படுதலைக் கண்டு வைத்து அதனினுஞ் சிறக்கவே ஒருபெருங் காப்பியஞ் செய்து புகழ்பெறவேண்டுமென்ற ஊக்கத்துடனே

இராமாவதாரத்தைப் பாடியிருப்பார். இவர் காலமோ சிந்தாமணி-யையே அரிய பெரிய காப்பியமாகப் போற்றிப் படித்த காலமாகும். அன்றியும் இவர் காலம் சயங்கொண்டார், சேக்கிழார் நாயனார், புகழேந்தியார், ஒட்டக்கூத்தர் முதலிய கவி வேந்தர்கள் எல்லாம் பெரிய பெரிய நூல்கள் பாடி அழியாப் புகழ் நிறுத்திய காலமாகும்.

கம்பர் இவர்கள் அறிவையெல்லாமும் அளந்தறிந்து கொண்ட-வருமாவர். அளக்கலாகா இயற்கையறிவின் மாட்சி நன்று பெற்ற ஒருவருக்குப் பல பெரிய புலவர்களின் புலமையையும் அளந்து கொண்ட செயற்கையறிவும் நன்கு கூடுமாயின் அவருக்கு அரிய-வாவன யாவை?

" மதிநுட்ப நூலோ டுடையார்க் கதி நுட்பம், யாவுள முன்னிற் பவை" என்பது பொய்யா மொழியன்றோ! இதனாற் திருத்தக்க தேவர்க்கும் கம்பருக்கும் நூலான் எய்திய செயற்கையுணர்விலும் சில வேற்றுமையுண்டென்று கொள்ளப்படும்.

மற்றுக் கம்பர் திருத்தக்க தேவர் கவிகளையும் நன்கறிந்தவர் என்றற்குச் சான்று என்னையெனின் இராமாவதார நூற்கண்ணே சிந்தாமணிச் சொல்லும் கருத்தும் ஆங்காங்குப் பயின்றிருத்தலேயா மென்க. கம்பர் சிந்தாமணிக்கருத்தை எடுத்தாளுமிடங்களி லெல்லாம் அந்நூற்கண் உள்ளவாறே கூறி யொழியாது தாமெடுத் தாளப் புகுந்த ஒவ்வொரு கருத்தையும் முன்னதினுஞ் சிறக்கப் புனைந்து பல அழகும் ஒழுங்கு பெறப் பாடுவரென வறிக.

சிந்தாமணியார் கருத்தும் கம்பர்பாற்பட்டு இனியசுவை யுடைத்தா மென்று கொள்க. இவ்வாறு வந்தன பலவற்றுள் ஈண்டுச் சில கூறுவல். கம்பர் ஆரணிய காண்டத்து மாரீசன் வதைப் படலத்து.

"ஆற்று ராகிற் றம்மைக் கொண்டடங் காரோ வென்
னுயிர்க்குக்
கூற்றாய் நின்ற குலச் சனகி குவளைமலர்ந்த தாரைக்குத்
தோற்று யதனை கங்கரித்தாய் மெலிந்தாய் வெதும்பத்
தொடங்கினாய்
மாற்றார் செல்வங் கண்டழிந்தால் வெற்றியாக வற்றுமோ

எனப்பாடியுள்ளார்.

இது சூர்ப்பநகையாற் சீதையின் பேரழகை நன்று கேட்டு அச் சீதையாற் பெருங் காமங்கொண்ட இராவணன் இரவிற்றன்-

ணில வெறிப்பக் கண்டு, என்றுங் குளிர்கின்ற மதிமயங்கிச் சுடுகின்ற தெனக்கருதி மதிமயங்கி அத்திங்களை நோக்கி கூறியதுக்குச் செய்யுள். இதன்கட் 'குவளை மலர்ந்த தாமரை' என்பது சிந்தாமணி-யார் கருத்தாம்.

> ''தாமரைப் போதிற் பூத்த தண்ணிறும் குவளைப் பூப்போற்
> காமரு முகத்திற் பூத்த கருமழைத் தடங்கண் டம்மால்''
> (மண்மகள். 32)

எனவும்.

> ''இழை யொளி பரந்த கோயி லினமலர்க் குவளைப்பொற்பூ
> விழைதகு கமல வட்டத் திடைவிராய்ப் பூத்ததேபோல்''
> (மண்மகள். 29)

எனவும் வருவன வற்றுணர்க. கம்பருக்குக் ''குவளை மலர்ந்த தாமரை'' என்னுங் கருத்து இச்சிந்தாமணி யடிகளினின்றும் உண்டாயிற்று என்று கொள்ளலாமாயினும், கம்பர் சிந்தாமணியார் கூறியாங் குக் கூருமல் அக்குவளை தாமரைகளுக்கும் திங்களுக்கும் உள்ள இயை பினைத் தெளிந்து, குவளையும் தாமரையும் வேறு வேறிடங்களிலுள வாயின் முன்னதை யலர்த்தியும், பின்னதைக் குவித்து வாடுவித்தும் போதுகின்ற அத் திங்கள், குவளையைத் தன்னடுவில் வைத்துக் கொண்டதோர் தாமரையுளதாயின் அதனைக் குவிக்கலாற்ருது தோற் கும் என்று கண்டு, யாண்டும் தாமரை திங்களுக்குத் தோற்றது போய் ஈண்டுச் சாநகி தாமரைக்குத் திங்கள் தோற்றது என்று வைத்துச் சமயோசிதமாக் 'குவளை மலர்ந்த தாமரைக்குத் தோற்ருய்' என்று அலங்கரித்தனர். திங்கள், குவளையைத் தன்நடுவில் வைத்துக் கொண் டதோர் தாமரைக்குத் தோற்றவாறு யாங்ஙன மெனின், திங்களினி யல்பு குவளையை அலர்த்தித் தாமரையைக் குவித்தல் அன்றே?

இத் தாமரை குவளையைத் தன் நடுவில் வைத்துக் கொண்ட-தாதலால் தாமரையைக் குவித்தால் அதன் நடுவிலுள்ள குவளையும் அதனுள்ளே சாம்பும்; அப்போது தானியல்பாக அலர்த்தும் குவளையை இவ்விடத்து அலர்த்திஞனுகான்; குவளையை அலர்த்தினும் அதனை நடுவிலுடைய தாமரையும் அலர்ந்துவிடும்; அப்போது தானியல் பாகக் குவிக்கின்ற தாமரையை ஈண்டு நிகழ்த்தவாற்ருது தோற்ருன் என்க. இத்தகைய தாமரை சாநகிபால் உள்ளது. அதற்கு மதி தோற்ரு னென்க. இவ்வியையெல்லாம் தம்முடைய பரந்த உள்ளத்து விரைந்துபட்டனவில்லை யாயின் ''குவளை மலர்ந்த தாமரைக்குத் தோற்ருய். அதனுல் அகங்கரித்தாய். மெலிந்தாய். வெதும்பத் தொடங் கிஞய்'' என அழகு பொலியக் கூறலாகாதென்க.

திங்கள் சாநகியினுடைய கண்களாகிய குவளை மலர்ந்த முகத் தாமரைக்குத் தோற்றதனுவுண்டாய உள்வெதுப்பு, அத்திங்களை அகங் கரிந்து மெலியச் செய்து புறத்தும் வெதும்பத் தொடங்கிற்றென்று னென்க. இப் பாட்டில் 'மாற்றார் செல்வங் கண்டழிந்தால் வெற்றி யாக வற்றுமோ'' என்னும் அறவுரை நினைக்கத் தக்கது. இவ்வறவுரை உபதேசஞ் செய்கின்ற இராவணனார் தாம் இப்போது புரிகின்றது அம் மாற்றார் செல்வங் கண்டழிதலின் வேறேயோ? இவர் மாற்றார் செல் வங் கேட்டழிபவர் போலும்!

இதனால் சிந்தாமணியார் கருத்து என்னப்பட்டதோர் நல்ல வண்ணத்தில் கம்பர் தம் பேரறிவாகிய எழுதுகோலைத் தோய்த்துக் கண்டார் கண்ணும் மனமும் கவருந்தகைத்தாக ஓர் செய்யுளாகிய திருவுருவைச் சித்திரித்தனர் என்று துணியலாகும். கம்பர் கோலங்-காண் படலத்து''

''பல்லிய னெறியிற் பார்க்கும் பரம்பொரு ளென்ன யார்க்கும்
இல்லை யுண்டென்ன நின்ற விடையினுக் கிடுக்கண் செய்தார்''

என்றார். இது,

''........ கண்கொள்ளா நுடங் கிடையை
யுண்டெனத் தமர் மதிப்பர் நோக்கினார் பிறரெல்லா
முண்டில்லை யெனவைய மல்ல தொன்றுணர் வரிதே''
(நாமகள் 143)

என்பது பற்றி வந்தது எனலாம்.

இதன்கண் 'உண்டெனத் தமர் மதிப்பர்' என்பது பற்றியே பின்னும் நாடவிட்ட படலத்தின்கண் சீராம பிரான் ''தொட்ட எந் குணரலா மற்றுண் டெனுஞ் சொல்லுமில்லை'' எனக் கூறியருளியதாகப் பாடினாரெனவுங் கருதலாம். இவ்விரிடத்துஞ் சிந்தாமணியார் கருத்தே பயின்றதாயினும் கம்பர் சிந்தாமணியார் கூறியாங்கு 'உண்டு இல்லையென வையம் உணர்வரிது' எனக் கூறி யொழியாமல், ''பல்லிய னெறியிற் பார்க்கும் பரம்பொருளென்ன யார்க்கும் இல்லை யுண்டென்ன நின்றஇடை'' என்று மிகவும் அழகியதோர்உவமையினை முன்வைத்து இன்மையும், உண்மையும் கூறுதல் காட்டியது எத்துணையேற்றம் உடையதென்பது உய்த்துணர்ந்து கொள்க.

பரம்பொருளை யெய்தியறிந்த சுவாநுபூதிமான்களுக்கே அதனுண்மை புலனாம்'' ஏனையோர்க்காகாது; அது போல் இவனி-யையும் தொட்டறிந்தவனுக் குணராலாமல்லது ஏனையோர்க்காகாது இக் கருத்து பற்றி யன்றே ''தொட்ட வெற் குணரலா'' மென்று சீராமமூர்த்தி திருவாக்கில் வைத்ததூஉ மென்க. (தொடரும்)

## காலத்தின் கோலம்

புலவர். இராமசாமி, ஒற்றைக்கடை

(சென்ற இதழின் தொடர்ச்சி)

இரண்டாம் கிழவன் இவ்வா றுரைக்க
அரசன் பணிப்பால் அவனது தந்தையும்
அவைக்கு வந்திட அழைத்தனர் ஏவலர்
வந்தவன் ஊன்றுகோல் உதவிவேண் டாமல்
கண்ணும் காதும் காரியம் செய்ய
வாய்ச்சொல் லுந்தெளி வாகவே விளங்க
எளிதாய் நடந்துவந் தெய்திய அவனிடம்
மன்னன் தானிய மணியைக் கொடுத்தனன்
கண்டதும் கிழவன் கொண்டவியப் பிற்கு
அளவே யில்லை, அதையுடன் வாங்கிப்
பலமுறை யுருட்டிப் பார்த்ததும் "ஆ! ஆ!!
இதுபோல் தானியம் யான்கண் டேநெடுங்
காலமா யிற்"றெனக் கடித்ததைச் சுவைத்து
"ஆ! முன் கண்ட அதேவகை யாமிது!"
என்றே மகிழ்வாய் எடுத்து மொழிந்தனன்
கிழவன் வார்த்தையைக் கேட்ட மன்னன்
"எப்பொழு தெங்கே இத்தகைத் தானியம்
விளைந்த தென்பதை விளக்கிடு வாயா?
இதைப்போல் விலைகொடுத் தெங்கே னும்நீ
வாங்கின துண்டா? வயலி லாயினும்
விளைத்த துண்டா? விளம்புக கிழவா!"
என்னலும் முதியோன் இயம்பு கின்றான்

அந்த நாளினிலே — இதுபோல்
அளவு தானியமே
எந்த ஊரிலுமே — விளைத்து
எடுத்த துண்டையா
இளம் பருவமுதல் — அதுவே
எமக்குண வாகி
வளம்படுத்தியதால் — உடலும்
வலிமை யுற்றதையா!
மற்றவர் களுக்கும் — இதையே
வழங்கி ஆதரித்தோம்
உற்ற நிலத்திலும் — இதையே
உழுது பயிர் செய்தோம்!"

என்று முதியோன் எடுத்துரை செய்ய
அரசன் கேட்பான் "அன்புடைக் கிழவா!
முதன்முதல் விளைத்த நீ இதனைஎங் கேனும்
விலைக்குப் பெற்று விளைவித் தனையா?
அன்றியுன் குடும்பம் ஆதியி லிருந்தே
பயிர் செய் ததுவா? பகர்க!" என்றலும்
முதியோன் வாய்ப்பல் முத்தென விளங்கச்
சிரித்துரைக் கின்றான்" திருவுடை யரசே!

எங்காலத் தில்பொருளை விற்றல் வாங்கல்
எனும்பாவத் தொழிலைநினைத் ததுவு மில்லை
மங்காத பணம்என்றால் இன்ன தென்றே
வாழ்விலறி யாதிருந்தோம் அந்நாள் யாமே
இங்கார்க்கும் வேண்டியதாம் உணவுச் செல்வம்
எப்போதும் குவிந்திருக்கும், தேவைக் கும்மேல்
பங்காளர் பகையில்லை உழைத்து ழைத்துப்
பயிர்செய்தோம் நிலந்தந்த பயன்தான்" என்றான்

மன்னன் கேட்பான் மகிழ்ச்சியால் நிறைந்து
"நினக்குச் சொந்தமாம் நிலம்எங் குளது?
அதைப்பயிர் செய்த அமைப்புங் கூறுவாய்!"
என்றதைக் கேட்டு நின்றிடுங் கிழவன்
ஒளியுறு கண்களை உருட்டிப் பார்த்து
"என்ன அரசே! எனக்கென நிலமா?
நீரும் காற்றும் நெருப்பும் வானும்
படைத்த இறைவனே நிலத்தையும் படைத்தான்
இன்னவை மாந்தர் யாவர்க் கும்போது
அன்னவன் படைத்த அவற்றில் எனக்கும்
பங்குண் டென்பேன் எங்கெங் குழுது
பாடு பட்டுப் பயிர்விளைத் தேனோ
அங்கெலாம் என்நிலம் அமைந்தது சொந்தமாய்
நிலத்தை விற்றலும் வாங்கலும் நிகழ்ந்ததே
இல்லையந் நாளில் இதுமுழு துண்மை
தனது தனதெனத் தானே யடையும்
மனது முன்னாள் மாந்தருக் கில்லை
உழைப்பெனும் ஒன்றே ஒவ்வொரு வருக்கும்
சொந்தச் செல்வமாய்த் துலங்கிய தையா'

உழைப்பிற் சிறந்த உழவர் தமக்கே
நிலங்கள் சொந்தமாய் நிலவின ஐயா!
வானில் வேலியை வளைத்துக் கட்டி
உரிமைகொண் டாடுவார் உலகில் உண்டா?
நிலமும் இந்த நியதியி லேயே
அமைந்தி ருந்தது ஐயா!'' என்றான்
வியப்பினை அடைந்த வேந்தன் கூறுவான்
''இன்னும் கிழவா! இரண்டு கேள்விகள்
உன்னிடம் கேட்க உளங்கொள் கின்றேன்
எனக்கவை விளங்க எடுத்துரை!'' என்று
கேள்விகள் இரண்டையும் கேட்கத் தொடங்கி
''அந்நாள் இதுபோல் அரும்பெருந் தானியம்
விளைத்துத் தந்த விளைநிலம் ஏனோ
இந்நாள் விளைப்பதை இழந்தே விட்டது?
நினக்குமுன் வந்த நின்னரும் பெயரன்
இருகை களிலும் இருகோல் ஊன்றி
நடந்திங் கணுக, நங்கட் டளைப்படி
அடுத்து வந்தநின் அருமைப் புதல்வன்
ஒருகோல் ஊன்றியிங் குற்றிட, நீயோ
எதன்உத வியுமே இல்லா திங்கு
வரும்பே ராற்றல் வாய்ந்த தெங்ஙனம்?
கண்ணும் காதும் நன்னிலை யுள்ளன
பற்களும் நல்ல பான்மையில் உள்ளன
சொல்லிலும் குரலிலும் வல்லமை உள்ளன
இப்பே ராற்றலை எங்ஙனம் பெற்றனை?''
வேந்தன் இவ்விதம் வினவக் கேட்டு
மூன்றாங் கிழவன் மொழிவான் விடையே
''மன்னவ! நின்றன் வாய்வரு கேள்வியை
உன்னுந் தோறும் உன்னுந் தோறும்

பண்டைக் காலப் பாவலர் ஆகிய
பிசிராந் தையெனும் பேரறி வாளர்
பாடிய சங்கப் பாடலின் கருத்தென்
உள்ளத் தெழுந்தே உவகை தந்தது.
ஒருநாள் அந்த உத்தமன் தனது
ஆருயிர் நண்பின் அரச ணுகிய
கோப்பெருஞ் சோழனைக் காண விழைந்து
அரசன் முன்னர் அடைந்த போது
ஆங்குவீற் றிருந்த அரசர்கள் அவரைக்
கண்டு மகிழ்ச்சி கொண்டவ ராகிப்
'புலவரே! நுமக்குப் பலவாண் டாகியும்
நரைதோன் ருததேன்? உரைசெய் வீ''ரென
'ஆந்தையார் கூறுவார் ''அன்பரே! கேட்பீர்
எனக்கு வாய்த்த இல்லக் கிழத்தியும்
மக்களும் என்றன் மனம்போல் வாழ்பவர்.
என் கருத் தறிந்திங் கினிதே பணிசெயும்
ஏவ லாளரை யான்பெற் றுள்ளேன்
மன்னனே மக்களை வருத்துதல் இன்றிப்
பன்னலஞ் செய்து பாதுகாக் கின்றனன்
இவரினும் மேலாய் யாவரும் போற்றக்
கல்வியால் நிறைந்து கேள்வியால் சிறந்து
அடக்கமாய் ஒழுகும் ஆன்ருேர் பலர்என்
ஊரில் நலமாய் உள்ளனர் அதனுல்
என்றன் வாழ்வில் ஏதும் கவலை
இல்லை ஆதலால் எனக்கு நரைதான்
இல்லை''யென் றுரைத்தார் என்பது பாடலின்
பொருளாம் அதனைப் போலவே என்றன்
விடையும் அமையும் வேந்தே அறிவீர்!

மாந்தர்கள் தம் உழைப்பால் —இங்கு
வாழ்வதனை விடுத்து
சார்ந்த பிறர் உழைப்பால் — வாழத்
தாம் நின்றநாள் முதலாய்
மாறுதல் நேர்ந்த தையா! — புவி
வாழ்க்கை திரிந்த தையா.
கூறும் எங் காலத்திலோ —மக்கள்
கொள்கை சிறந்த தையா!
ஆந்துணை யாமிறைவன் — வகுத்த
ஆணையை மீறாமல்
சாந்துணையும் நலமே — நினைந்து
தம் கடன் செய்தாரையா!
தங்கள் உழைப்பாலே — வரும் பொருள்
தக்கதென மதித்து
அங்கதைத் தாம் போற்றி — மன
அமைதி கண்டாரையா!
மற்றவரின் உழைப்பில் — வருவதை
வஞ்சனைச் சூதுகளால்
பெற்றிடும் பேய் மனத்தார் — அந்நாள்
பெருகிய தில்லையயா!"

(முற்றிற்று)

## சீனத்துப் பேரறிஞன்

பழநி. அரங்கசாமி
மதுரைப் பல்கலைக்கழகம் மதுரை-21

உலகளாவிய கருத்துக்களைத் தன்பாற் கொண்டிருக்கும் அரிய நூல் திருக்குறள். அதனை இயற்றிய வள்ளுவப் பெருமான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். இவரை ஒத்த தொன்மையும் சிறப்பும் வாய்ந்த பேரறிஞர் கன்பூசியஸ் அண்டை நாடான சீனாவில் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவராகக் கருதப்படுகிறார். ஒவ்வோர் ஆங்கில ஆண்டிலும் செப்டம்பர் மாதத்தில் இவருடைய பிறந்த நாள் கொண்டாடப்படுகிறது. இவருக்கென்று சீனாவில் கோவில்கள் உண்டு. ஆனால் அக்கோயில்களில் உருவ வழிபாடு இல்லை. தெய்வத்தை ஒத்து மதிக்கப்படுவோரின் பெயர்கள் மிக நீண்ட மரப்பலகைகளில் பொறிக்கப்பட்டிருக்கும். இதில் கன்பூசியஸின் பெயரும் பலகையின் மத்தியில் காணப்படும். இவை அனைத்துக்கும் சேர்த்தே அங்கு வழிபாடு நடக்கும். சீனமொழியில் அவரது பெயர் கங் பூ சூ என்பதே. 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சீனாவுக்கு வந்த கத்தோலிக்கப் பாதிரியார்களே கங்பூசூவைக் கன்பூசியஸ் என்று அழைத்தனர். பின்னர் எங்கணும் இப்பெயரே நிலைத்து விட்டது.

கடவுளாகவே கருதி வணங்கப்படுபவர் கன்பூசியஸ். ஆனால் அவர் வாழ்ந்த காலத்தில் கடவுளைப் பற்றி அவர் அலட்டிக் கொண்டதில்லை. கடவுள் உண்மையினையும் அவர் மறுக்கவில்லை. மனித அறிவுக்கு எட்டாத கடவுளரைப் பற்றிய சிந்தனை தேவையற்றது என்றே கருதினார். எனவே தெய்வநம்பிக்கைகளையும், மூடப் பழக்கவழக்கங்களையும் அச்சமின்றிச் சாடினார். அவருடைய கருத்துக்களை அந்தக் காலத்தில் மென்மையாகச் செதுக்கப்பட்ட மூங்கில் ஓலைகளில் குறித்து வைத்திருந்தனர்.

கன்பூசியஸ் மறைந்த முன்னூறு ஆண்டுகளுக்குப் பின்னரே அவருடைய வரலாறு எழுதப்பட்டது. கன்பூசியஸ் பிறந்த இடத்திற்குச் சென்று அவருடைய கொள்கைகளைப் பாரம்பரியாகப் பின்பற்றுவோரிடம் கலந்து பழகி, அதன் பின்னரே எழுதப்பட்டது அவ்வரலாறு. கி. பி. 551-இல் லூ என்ற மாவட்டத்தில் ஒரு எளிய குடும்பத்தில் பிறந்தகன்பூசியஸ்தனக்குவிவரம் தெரியாதகாலத்திலேயே தந்தையை

இழந்தார். லூ மாவட்டப்பிரபுவிடம் வேலைக்கமர்ந்து அவனுடைய தானியக் களஞ்சியத்தைக் காப்போனாகவும் கால் நடை மேற்பார்வையாளனாகவும் பணி புரிந்தார். நெடிய தோற்றமும், நேர்மையும், அஞ்சாமையும் கொண்டிலங்கிய அவருக்கு அனைவரும் மதிப்பளித்தனர். இருப்பினும் மிக்க அடக்கத்தோடு அவர் காலத்தில் வாழ்ந்த லாவோ சே என்ற பேரறிஞனிடம் பழகி அரியகருத்துக்களைத் தெரிந்துகொண்டு தமது அறிவைப் பெருக்கிக் கொண்டார்.

ஏறத்தாழ ஐம்பது வயதாகும்போது சங்தூ என்ற மாவட்டத்தில் நீதிபதியாக அமர்த்தப்பட்டார். நேர்மைக்கும் நீதிக்கும் பங்கம் வராது பணிபுரிந்தார். உணவுப் பொருள்களைப் பதுக்கும் வணிகர்கள் இவரால் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். குறிப்பாகப் பன்றி இறைச்சியிலும், ஆட்டிறைச்சியிலும் கலப்படம் செய்யும் கொடிய பழக்கத்தை இவர் அறவே ஒழித்துக் கட்டினார். இவர்தம் திறமையை அறிந்த வேரூர் பிரபு ஆண்டுக்கு அறுபதினாயிரம் மரக்கால் அரிசியை ஊதியமாகக் கொடுத்து அவரை விரும்பி அழைத்து தனது மாவட்டத்தில் பதவியில் அமர்த்தினான். காழ்ப்புணர்ச்சி கொண்டோரின் வார்த்தைகளை அவன் காதில் போட்டுக் கொள்ளத் துவங்கியதும் கன்பூசியஸ் பதவியை விட்டு விலகினார். சீன நாட்டின் பல்வேறு பகுதிகட்கும் கால்நடையாகவும் குதிரையிலும் தமது சீடர்கள் புடைசூழ இவர் பயணம் செய்தார். இவருடைய சீடர் ஒருவரைப் பார்த்து, வழிப்போக்கன் ஒருவன் "உங்கள் தலைவருக்கு ஓய்வு எடுக்க வேண்டிய வயது ஆகவில்லையா?" என்று கேட்டதற்கு, சீடன் ஒன்றும் பதிலிறுக்கவில்லை. "உண்மையே பின்பற்றுவதும், ஓய்ச்சல் ஒழிவின்றி மக்களுக்கு அறிவு புகட்டுவதுமே உளமார்ந்த தொண்டாகக் கருதும் எனக்கு முதுமை என்பதே இல்லை" என்று கன்பூசியஸே அதற்கு விடை கொடுத்தார்.

தாம் பணிபுரிந்த லூ மாவட்டத்திலிருந்து ஏறத்தாழப் பதினான்கு ஆண்டுகள் சீனாவின் பல்வேறு பகுதிகட்கும் சுற்றுப் பயணம் செய்தார். குறிப்பிட்ட சில சீடர்களும் ஆங்காங்கு அவர் கருத்துரையைக் கேட்டுக்கொண்டும் பணிவிடை செய்து கொண்டும் சீன நாட்டைச் சுற்றி வந்தனர். சீனாவின் பல்வேறு பிரபுக்கள் தங்கள் ஆளுகை பற்றியும், யுத்த முறைகள் பற்றியும் கன்பூசியஸிடம் அறிவுரை பெற்றுக் கொண்டனர். வேய் மாவட்டப் பிரபுவான குவாங், வியூகம் வகுத்துப் போரிடும் முறை பற்றிய ஓர் ஐயத்தைத் தெளிவுபடுத்திக் கொள்ளக் கன்பூசியஸிடம் வந்தார். ஆனால் அணுகிய முறையில்

எளிமையும் பணிவும் இல்லை. எனவே யுத்த தந்திரம் பற்றித் தமக்கு ஒன்றும் தெரியாது என்று கன்பூசியஸ் அவரைத் திருப்பி அனுப்பி விட்டார். இதனைப் பற்றிக் கன்பூசியஸ் "ஒரு பறவை தன்னிச்சை-யாகவும், சுதந்திரமாகவும் தான் ஒரு மரத்தை அண்டித் தங்கும். அதைவிட்டு மரம் பறவையை அழைத்துத் தங்குமாறு செய்ய முடியாது" என்று குறிப்பிட்டார்.

சமூகம், அரசியல் ஆகியவற்றில் நடைமுறை அறிவுக்கு உகந்தவாறு கருத்துரைகள் வழங்கியதோடு கன்பூசியஸ் இசையிலும் நல்ல ஆர்வம் காட்டினார். முந்நூறுக்கு மேற்பட்ட பாடல்களைத் தாமே இயற்றியதுடன், தாம் வாழ்ந்த காலத்தில் தாளத்தோடு பாடியும் காட்டியுள்ளார். பாட்டுக் கச்சேரிகளுக்கு இடையிலேயே கூடியிருந்தோர் மனங்கொள்ளுமாறு அறிவுரை சொல்வதும் அவர் வழக்கம். மனித வாழ்வில் நேர்மை, உண்மை ஆகியவற்றைப் பின் பற்றுவதோடு பிறர் கருத்துக்கு மதிப்புக் கொடுத்தலையும், எளியோரின் நலம் பேணுதலையும் பெரிதும் வற்புறுத்தினார். தம்முடைய சொற்-பொழிவுகளில் மறுமை வாழ்வு, ஊழ், விதி போன்றவற்றைப் பற்றி அவர் பேசுவது கிடையாது. அரசவைகளில் பேசும்போது எளிய-வர்களைப் பற்றி அன்புடனும், செல்வர்களைப் பற்றி மதிப்புடனும் பேசுவார். தகுதியற்ற அரசனைப் பதவியிலிருந்து நீக்குவதற்கு இறுதி அதிகாரம் மக்களுக்கே உண்டு என்று முழங்கியவர் கன்பூசியஸ்-தம்முடைய விவாதங்களில் புராணக் கருத்துக்களுக்கும், பிசாசு, ஆவி, மறுமை போன்றவற்றிற்கும் இடங்கொடுக்கமாட்டார். ஏனென்றால் அவைபற்றி அவருக்கு நம்பிக்கை கிடையாது வரலாறு, இசை இலக்கியம் ஆகியவை பற்றிய அவருடைய சொற்பொழிவுகளைக் கேட்டு ரசிக்கும் சீடர்களாக ஏறத்தாழ மூவாயிரம் பேர் சீன நாடெங்கணும் இருந்தனர்.

தம்முடைய அனுபவங்களையும், அந்நாளைய அரச வம்சங்களையும் மனத்திற் கொண்டு, "வசந்தகாலச் சரித்திரக் குறிப்புகள்" என்ற நூலை எழுதினார் சொற்சுருக்கமும், ஆழ்ந்த பொருளும் கொண்டிலங்கிய அந்நூலைப் பிரபுக்களும், மாமன்னர்களும் விரும்பிப் பயின்றனர் என்று கூறப்படுகிறது. வாழ்நாளின் பெரும்பகுதியைச் சுயமான சிந்தனையிலும், சொற்பொழிவுகளிலும், பயணத்திலும் செலவழித்த இந்தச் சீனப் பேரறிஞர் தம்முடைய 73-ஆம் வயதில் கி. மு. 479-ல் காலமானார். லூ என்ற மாநகரின் வடபுறத்தில் ஓர் ஆற்றங்கரையில் அவர் உடலைப் புதைத்தார்கள். நூற்றுக்கணக்கான

கன்பூசியஸின் சீடர்கள் வாய்விட்டு அரற்றி அழுதார்கள் என்று வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. அவர் உடல் புதைக்கப்பட்ட இடத்திற்கு அருகில், குறிப்பிட்ட சில குடும்பத்தினர் மட்டும் நிரந்தரமாகத் தங்கி விட்டனர். அவருடைய நினைவினை மறவாமல் இருக்கவும், அவர் புதைக்கப்பட்ட இடத்தில் ஆகுதி செய்து வழிபாடு நடத்தவும் வேண்டியே அவர்கள் அவ்வாறு செய்தனர். அவர்கள் தங்கிய இடமே பின்னர் ஒரு பெரிய ஊராக வளர்ந்தது. கன்பூசியஸ் புதைக்கப்பட்ட இடத்தில் ஒரு பெரிய கோவிலும் எழுப்பப்பட்டது. அவர்தம் வாழ்நாளில் பயன்படுத்திய குல்லாய்கள், மேலங்கிகள், இசைக்கருவிகள், நூல்கள் ஆகியவை அங்குக் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டன. ஏறத்தாழ இருநூறு ஆண்டுகள் இவையெல்லாம் அழியாமல் பாதுகாக்கப்பட்டன.

புத்தர், ஏசு, முகம்மது போன்றோரோடு ஒருங்கு வைத்து எண்ணத்தகும் ஏற்றம் படைத்தவர் கன்பூசியஸ். ஆனால் அவர்கள் எல்லாம் புத்த, கிறித்துவ, இசுலாமிய மதங்கள் ஏற்படக் காரணமாக இருந்தவர்கள்; அம்மதங்களைத் தோற்றுவித்தவர்கள். கன்பூசியஸ் தாம் வாழ்ந்த காலத்தில் சீனாவில் நிலவிய மதக் கோட்பாடுகளுக்கு விளக்கம் சொல்பவராகவும், ஒரு தத்துவ ஞானியாகவும் திகழ்ந்தார். அவர் பெயரால் கோவில்கள் இருந்தாலும், கன்பூசியமதம் என்பதாக ஒன்றும் ஏற்பட்டு விடவில்லை. உருவ வழிபாட்டையோ, தனிமனித வழிபாட்டையோ கன்பூசியஸ் ஒருபோதும் விரும்பியதில்லை. சூதும் வாதும் மலிந்த உலகத்தைத் திருத்தி, மனிதனின் இல்வாழ்க்கையை நலமுற அமைத்தல் வேண்டும் என்பதையே அவர் விரும்பினார். எனவே அவரை ஒரு 'மானிடப் பண்பாளர்' (humanist) என்று அழைக்கலாம்.

கன்பூசியஸின் மறைவுக்குப் பின்னர் அவருடைய சிறந்த பல கருத்துக்களை அவர் மாணவர்கள் தொகுத்துச் 'சொற்பொழிவுகளும் உரையாடல்களும்' என்ற தலைப்பைக் கொண்ட ஒரு நூல் வெளியிட்டார்கள். காலமெலாம் கற்றுத் தேர்ந்து, சுய சிந்தனைக்கு ஆக்கம் கொடுப்பதை அவர் பெரிதும் விரும்பியிருக்கிறார். "பிறப்பிலிருந்தே கூர்த்த மதியும் ஆழ்ந்த அறிவும் கொண்டு விளங்குபவனே மிக உயர்ந்த மனிதன்; கற்றுணர்ந்து அறிஞன் ஆனவன் அவனுக்கு அடுத்த நிலைதான்; வலிந்து கற்று அறிவுச் சூன்யத்தை விலக்கி கொண்டவன். அதற்கடுத்தநிலை; மந்த புத்தியில் இருந்தும் கூடத் தன்னைத் திருத்திக் கொள்ளாதவனே அடிமடையனாவான்" என்பது அவர் கருத்தாகும்.

தம்மை விளம்பரப்படுத்திக் கொள்ளாத அடக்கமும், கற்றுணர்ந்து அறிவினைப் பெருக்கிக் கொள்வதில் தணியாத ஆர்வமும், சுய சிந்தனையில் நாட்டமும் கொண்டிருந்தவர் இந்தச் சீனத்துப் பேரறிஞர். எனவேதான் சீனாவில் குறிப்பிட்ட ஒருநாளை ஆசிரியர் தினமாகக் கொண்டாடுவதற்கு, கன்பூசியஸின் பிறந்த தினமாகக் கருதப்படும் செப்டம்பர் 28-ஆம் நாளைத்தெரிந்தெடுத்தார்கள்.எந்தஒரு மதத்திலும், இனத்திலும் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளாமல், மனித குலம் அனைத்துக்கும் தேவையான உயரிய கருத்துக்களை வெளிப்படுத்தியதனால், கன்பூசியஸ் காலத்தைக் கடந்து நிற்கும் ஞானியாகக் கருதப்படுகிறார்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்டுக் காலத்தைக் கடந்து நிற்கும் இப்பேரறிஞனை, இன்றைய பொது உடைமைச் சீனா மாசேதுங் காலத்தில் ஓரிரு ஆண்டுகள் புறக்கணித்துப் பார்த்தது. ஆனால் கன்பூசியஸின் நினைவையும், கருத்தையும் மக்கள் மன்றத்திலிருந்து மறைக்க முடியவில்லை. சீன நாட்டில் மட்டுமேயன்றி உலகில் பற்பல, நாடுகளிலும் காலந்தோறும் அவர்தம் கருத்துக்களை ஊன்றிப் படிக்கின்றனர். ஆங்கில நாட்டுக் கவிஞன் ஆலிவர் கோல்டுஸ்மித், பிரெஞ்சுப்புரட்சிக்கு வித்திட்ட வால்டேர் போன்றோர் கன்பூசியக் கொள்கையில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தனர். இன்றைய சீனாவிலுங் கூடக் கன்பூசியக் கோவில்களில் சீன மக்களில் ஒரு பிரிவினர் அவருக்கு வழிபாடு நடத்திக் கொண்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

## சாளுவத் திருமலைராயன்

புலவர் திருமேனி நாகராசன்,
காரைக்கால்.

''பண்டைத் தமிழர்க்கு வரலாற்றுணர்ச்சி இல்லாதது ஒரு குறை'' என்பர் இக்கால வரலாற்றறிஞர். ஆனால் அவர்கள் இலக்கிய உணர்ச்சி மிகுந்தவர்கள். எதனையும் இலக்கியக் கண் கொண்டே காண்பவர்கள். அதனால்தான் வரலாறுகூட அவர்களின் இலக்கியப் பார்வையிலிருந்து தப்பவில்லை. வரலாற்றையும் இலக்கியமாகவே எழுதிவைத்துப் போய்விட்டார்கள் புறநானூறு, பதிற்றுப்பத்து முதலியனவெல்லாம் இதற்குச் சான்றாகும்.

இக் காரணங்களால், பண்டைக் காலத்தில் சிலபேர்கள் தாம் சரித்திர இலக்கியங்களில் இடம் பெற்றார்கள். பல பேர்களைப் பற்றிய தடயங்கள் கூடக் காணப்படவில்லை. இடைக் காலத்தில் வாழ்ந்த அரசர்களைப் பற்றி ஏதோ தெரிகிறது. பிற்காலத்தில் அரசாண்டவர்களைப் பற்றியோ பெயரோடு சிறுகுறிப்பும் தெரிய வருகிறது பலரைப் பற்றித் தொட்டுமட்டுந்தான் காட்டப்படுகிறது. அதனாலேயே வரலாறு எழுத வந்தவர்கள் தொட்டுக் காட்டப்பட்டவர்களை விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். இப்பொழுது மறுமலர்ச்சிக் காலம் மலரத் தொடங்கிவிட்டதால், தொட்டுக் காட்டப்பட்டவர்களைப் பற்றி ஆராயும் முனைப்பு முகிழ்த்துள்ளது. அம் முனைப்பின் முழுப் பலனால், ஒரு சரித்திர நாயகன் வரலாறு உங்கள் முன் வருகிறது.

கிடைத்த கல்வெட்டுகள், இலக்கியங்கள், வரலாற்று ஏடுகள், மரபுவழிச் செய்திகள், நேரடிக் காண்புகள் ஆகிய சான்றுகளின் அடிப்படையில் இங்கே வருபவன் ஒரு சரித்திரத் தலைவன். அவனே சாளுவத் திருமலைராயன் என்னும் அரசன்.

ஆய்வு முடிவுற்றது; அது கிடைக்கப்பட்ட சான்றுகளால் கட்டப்படுவது. சான்றுகளுக்குக் காலவரையறை இல்லை ஒரு சமயம் சில கிடைக்கும்; வேறொரு சமயத்தில் வேறு சில கிட்டும். அவை ஒன்றற்கொன்று முரணவும் பெறும். அதனால் ஒரு காலத்தில் தீர்மானிக்கப்பட்ட வரலாற்றுண்மை பிறிதொரு காலத்தில் பொய்யெனப் போய்விடவும் கூடும். ஆதலின் வரலாறு எதுவும் முற்ற முடிந்த முடிபென்று எண்ணுவது செந்நெறியாகாது. கிடைக்கப்பட்ட சான்றுகளைக் கொண்டு தொகுத்து எழுதப்பட்ட இக் கட்டுரையை ஆய்வு நோக்கில் பார்த்தல் அறிஞர் கடனாகும். இனி, சாளுவத் திருமலைராயன் வரலாற்றினைக் காண்போம்.

1. "13-ஆம் நூற்றுண்டிலேயே தஞ்சைச் சோழர் ஆட்சி முடிவடைந்து விட்டது. 14-ஆம் நூற்றுண்டில் மதுரையை மாலிக்காபூர் என்ற டில்லி ஆட்சியின் முகம்மதியப் படைத்தலைவன் கைப்பற்றிப் பாண்டியர்களை அங்கிருந்து துரத்திவிட்டான். சில நாளில் விஜய_நகரப் பேரரசின் படைகள் முகம்மதியரை வெருட்டி மதுரையைக் கைப்பற்றிக் கொண்டன. மல்லிகார்ச்சுனராயர், விருபாட்சராயர் என்ற ராயர் குல அரசர் இருவர் காலங்களில் ஓரளவு நாட்டில் அமைதி ஏற்பட்டிருந்தது. இவர்கள் காலத்தில் விஜய நகர ஆட்சியின் பிரதிநிதியாகத் தமிழ் நாட்டில் இருந்தவன்தான் சாளுவத் திருமலை ராயன் என்பவன்".

மரபு:- 2. திருமலைராயன் சாளுவ வமிசத்தைச் சார்ந்தவன். அவனுடைய தந்தை கோப்பயன் என்பவன். அவனுடைய பூர்வக் குடிப் பெயர் கல்யாணி என்பதாகும். அவனுக்கு வழங்கிய சிறப்புப் பெயர் விதரண ராமன் என்பது

தோற்றம்:- சாளுவத் திருமலைராயனை "மந்திரப் புயனும்" என்று அவன் காலப் புலவன் காளமேகர் பாடுவதால் ராயன் மந்திரமலை போன்ற தோள்களைக் கொண்டவன் என்பது புலப்படும். தோள்கள் மலைபோல் இருந்ததால் அவன் பெருமிதமான தோற்றம் உடையவன் அன்றோ? ராயனை அப் புலவன் 'சீருற்ற சொக்கோல மேனித் திருமலைராயன்" எனப் பாராட்டுவதால் எல்லோரும் கொண்டாடுகின்ற அழகமைந்த சிவந்த நிறத்தை உடையவன் என்பதும் பெறப்படும்.

நாடு:- திருமலைராயன் முதலில் தஞ்சைப் பகுதியை நிர்வகித்து வந்தான். பின்னர்த் தற்போது இஸ்லாமியர் ஏத்தும் நாகூருக்கும் காரைக்காலம்மையார் பிறந்த காரைக்காலுக்கும் இடையே உள்ள பட்டினத்திற்குத் தன் தலைநகரை மாற்றிக் கொண்டான். திருமலைராயன் தோற்றுவித்த கடற்கரை நகரமாதலின் இந் நகருக்குத் திருமலைராயன் பட்டினம் என்பது பெயராயிற்று.

வளம்:- திருமலைராயன் பட்டினம் கழனிகள் சூழக் காவளம் பெருக்கும் காவிரியின் இரு கிளை நதிகளுக்கு இடையே இருப்பது; நீர் வளத்தோடு நில வளமும் மிக்கது; நிறைய சோலைகளை உடையது. இன்னும் "தேனுந்து சோலைத் திருமலைரா யன்வரை" என்றெல்லாம் பட்டினத்தின் சோலை வளத்தைப் பாராட்டிப் பாடுகிருர் கவி காளமேகம். ராயன் இவ்வூரில் முந்நூற்று அறுபத்தைந்து குளங்களை வெட்டினன் என்றும் செவிவழிச் செய்தி உண்டு. இது மிகை என்ருலும், அப்படியே தள்ளி விடுவதற்கு இல்லை. இக் கூற்றுக்களில் ஓர் உண்மை

இருக்கத்தான் இருக்கும். அது யாதெனில் இவ்வூரின் வளங்கருதி அரசன் பல குளங்களை வெட்டினன் என்பதே. இக் கருத்தை மெய்ப்பிக்கும் வகையில் இன்றும் இந்த ஊருக்கு நேரில் சென்று பார்த்தால் நிறைய குளங்கள் இருப்பதைக் காணலாம்.

காலம்:- சாளுவத் திருமலைராயனின் கல்வெட்டுகள் திருவானைக்கா, தஞ்சை, பாபநாசம், பட்டீச்சுரம் முதலிய ஊர்களில் காணப்படுகின்றன. திருவானைக்கா கோயிலில் ஒன்றும் ஸ்ரீரங்கம் கோயிலில் ஒன்றுமாக இவனுடைய கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவை முறையே 1453, 1463-ஆம் ஆண்டுகளில் ஏற்பட்டவை. மேலும் தஞ்சைப்பெரிய கோயிலில் காணப்படுகின்ற இவனது சாசனம் 1455-ஆம் ஆண்டு ஏற்பட்டது. எனவே இவனுடைய காலத்தை 1453_ முதல் 1468 வரை யென வரையறுக்கலாம். எனவே இவனது காலம் பதினைந்தாம் நூற்றுண்டின் இடைக்காலம் என்பது துணிபு.

ஆட்சி: திருமலைராயன் நல்லாட்சி செய்து வந்தவன் முறை செய்து மக்களைக் காப்பாற்றி வந்தான். அவனைத் "தீங்காய தில்லாத் திருமலைராயன்" எனக் காளமேகம் பேசுகிறுன். எனவே அவன் நல்லாட்சி செய்து வந்த நல்லரசன் அல்லவா?

வீரம்: ராயன் வீமனென உடல் வலிமை மிகுந்தவன். அவன் பேராற்றல் படைத்தவன்: பகைவரை வென்றவன்: வெற்றிதரும் வீரவாளை ஏந்தியவன்.

அருஞ்செயல்: திருமலைராயன் பரோபகாரச் சிந்தை கொண்டவன். அவன் ஆறு ஒன்று வெட்டினன். அஃது அரிசிலாற்றுக்கும் முடிகொண்டான் ஆற்றுக்கும் இடையில் ஓடுகிறது. அந்த ஆறு திருமலை ராயன் பட்டினத்தின் வழியே ஓடி வங்கக் கடலில் கலக்கிறது. ராயன் வெட்டிய காரணத்தால் அதற்குத் திருமலைராயன் ஆறு என்பது பெயர். இன்று அந்த ஆறு ஊரின் எல்லையில் ஓடிக்கொண்டிருக்கிறது. பட்டினத்தின் வேளாண்மைக்கு உயிரூட்டுவது இவ்வாறு தான்.

திருப்பணி : அவன் முந்நூற்று அறுபத்தைந்து கோயில்களை அமைத்தான் என்பர் ஒரு சாரார்; நூற்றெட்டுக் கோயில்களைக் கட்டினன் என்பர் மற்றொரு சாரார். இச் செவிவழிச் செய்தி அப்படியே உண்மை இல்லையாயினும் பாதியளவுக்கேனும் உண்மையென இவ்வூரை இன்று நேரில் சென்று காண்பவர் அறியலாம். ஆம்! அத்தனை கோயில்கள் இடிபாடுற்றுக் காணப்படுகின்றன. அக்கோயில்கள் மூலமாகப் பெறப்படும் வரலாற்றுக் குறிப்புகள் சிறப்பாக ஒன்றும்

கிட்டவில்லை ராயன் சமயப்பற்று மிக்கவன் என்பது மட்டும் துணிபு. சமயம்: ராயன் திருவானைக்கா அகிலாண்ட நாயகிக்கு ஆபரணங்கள் செய்து கொடுத்திருக்கிறான் என்பதை அவ்வூர் ஜம்புகேஸ்வரர் ஆலயக் கல்வெட்டால் அறியலாம். அவன் சில ஊர்களை முழு மானியமாகக் கோயிலுக்கு வழங்கிய செய்தியைத் தஞ்சைப் பிரகதீஸ்வரர் ஆலயத்தில் காணலாம். சிவாலயங்களுக்குச் செய்த ராயனின் செய்கையால் அவன் சமயம் சைவம் என்பது பெறப்படும்.

கொடை:- ராயன் சமயச் சிந்தையோடு அறச்சிந்தையும் உடையவன். அவன் தரும சிந்தைக்குக் காளமேகத்திற்கு அவன் அளித்த சிறப்பே போதிய சான்றும். ராயன் வறுமையில் வாடிவந்த காளமேகப் புலவருக்குப் பொன்னும் பொருளும் கொடுத்து அவரது வறுமைக்கு முடிவு கண்டான்.

புலவர்களைப் போற்றல்:- ராயன் சிறந்த தமிழ்ச் சுவைஞன். அவன் அவையில் பல தண்டமிழ்ப் புலவர்கள் இருந்து அவனுக்குத் தமிழின்பத்தை வாரி ஈந்திருக்கின்றனர். அவர்கள் அறுபத்து நான்குபேர் ஆவர். அப் புலவர்களுள் தலைவராய் விளங்கியவர் அதிமதுரக்கவிராயர். பெயரை நோக்கின அளவிலேயே அவரது கவிச்சுவையின் சிறப்பு தெரியவரும். அவர் புலவர் குழுவின் தலைமைப் புலவர். அப் புலவர் பெருமக்கள் பாடிய பாடல்கள் ஒன்றேனும் இன்று கிடைக்கவில்லை. தலைமைப் புலவன் பாடிய ஒரு பாடல் மட்டுமே இப்பொழுது கிடைத்திருக்கிறது.

ராயனும் காளமேகமும்:- கவி காளமேகம் ஒப்பற்ற புலவன்; ஆசுகவி. அவன் திருமலைராயனின் தமிழ்ப்பற்றினைச் செவியுற்று அவனைப் பாடிப் பரிசில் பெறத் திருமலைராயன் பட்டினம் வந்தான். அவன் மன்னனைக் காண ஆவலுடன் அரண்மனைக்கு வந்தபோது அங்கிருந்த அரசனும் அருந்தமிழ்ப்புலவர் அதிமதுரக் கவியும் அறுபத்து நான்கு அரும்புலவரும் உட்கார இடங்கொடுத்தாரில்லை. அப்பொழுது காளமேகம் கலைமகளை உள்ளத்தில் தியானித்து,

''வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாய்- வெள்ளை
அரியா சனத்தில் அரசரோடு என்னைச்
சரியாசனம் வைத்த தாய்''

என்று பாடியவளவில் ராயன் வீற்றிருந்த அரியணையே வளர்ந்து புலவன் அமர இடமளித்தது. அரசன் அச்செயல் கண்டு அஞ்சி வியந்து உடனே கவிஞரைப் பாராட்டிக்கொண்டாடத் தொடங்கினான்.

அப்பொழுது அதனைக் கண்டு பொறுக்க மாட்டாத அதிமதுரக் கவி காளமேகத்தை ஒழித்துக் கட்ட எண்ணி "அரசே' காளமேகத்தைத் தெய்வீகக் கவி என்று ஒத்துக் கொள்ள முடியாது. அவன் பாடல் தற்செயலானது; யமகண்டம் பாடி வெற்றி பெற்றால் அவனைத் தலைமைப் புலவனாக்கிக் கொள்ளலாம்''என்று சொல்லிக் காள-மேகத்தை யமகண்டம் பாடச் சம்மதிக்கச் செய்து விட்டான்.

யமகண்டம் ஒரு பயங்கரமான கவிதைப் பந்தயம். அந்தப் பந்தயத்திற்கு நாள் குறிக்கப்பட்டுவிட்டது. நகரெங்கும் அறிவிக்கப் பட்டுவிட்டது. மக்கள் வெள்ளம் அரண்மனை முன்புறத்திலிருந்த மைதானத்தில் கூடி விட்டது. ராயனும் மற்றப் பரிவாரங்களுடன் போட்டி நடக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்து விட்டான். யமகண்டம் என்றால் என்ன? "பூமியில் பதினாறடி நீளம், பதினாறடி அகலம், பதினாறடி ஆழமாகச் சதுரத்திற்குக் குழி வெட்டி அதன் நான்கு மூலையிலும் பதினாறடி இரும்புக் கம்பங்கள் நாட்டிக் கம்பத்தின் மேல் நாலு பக்கத்திலும் இரும்பினால் நாலு சட்டமும் நடுவேயொரு சட்டமும் போட்டு நடுச்சட்டத்தில் உறி கட்டிக் குழிக்குள்பருத்த புளியங்கட்டை-களை நெருங்க அடுக்கி, கட்டைக்குள் நெருப்பை மூட்டி அது கனன்-றெழுந்து கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்க, அந்நெருப்பில் ஓர் ஆளுயரமான இருப்புக் கொப்பரை வைத்துக் கொப்பரை நிறைய எண்ணெய் விட்டு அதில் அரக்கு, மெழுகு, குங்கிலியம், கந்தகம் சாம்பிராணிகளை நிரப்பி அவை நன்றாய்க் காய்ந்து உருகிக் கொதித்துக் கொண்டிருக்க,நான்கு யானைகளைப் பாகர்கள் மதமேற்றிக் கொண்டு வந்து கம்பத்திற்கு ஒவ்வொன்றாக மலைகளைப் போல் நிறுத்தி வைத்திருக்க, பின்புறத்தில் வளையம் வைத்து வளையத்திற் சங்கிலி கோத்து நயத்த எழுகினால் கூர்மையாகச் சமைத்துப் பளபளவென்று மின்னும்படிச் சாணை பிடித்த எட்டுக் கத்திகளைக் கழுத்தில் நாலும் அரையில் நாலுமாகக் கட்டிக்கொண்டு கத்திகளின் புறத்திலுள்ள சங்கிலிகளை மேற்படி யானைகளின் துதிக்கையிற் கொடுத்து வைத்து, தான் கொப்பரைக்கு நேராகத் தொங்குகின்ற உறிநடுவில் ஏறியிருந்து, எவரெவர் என்ன என்ன சமுத்தி கொடுத்தாலும் அவைகளை அந்-நொடியிலே தானே தடை இன்றிக் குறித்த கருத்தின்படி இசைத்துப் பாட வேண்டியது. அவ்வாறு பாடும் பொழுது எள்ள-ளவாவது வழுவுமானால் சமுத்தி கொடுத்தவர்கள் யானை மேலிருக்கும் பாகர்களுக்குக் கண் சைகை காட்டி அவர்கள் யானைகளை மத்தகத்-தில் அங்குசத்தாற் குத்தி அதட்ட, அவை தமது துதிக்கையிற் கொடுக்கப்பட்டிருக்குஞ் சங்கிலிகளை விசையாயிழுக்க, இழுத்தவுடனே

புலவன் கழுத்தும் அரையும் கத்திகளால் துண்டிக்கப்பட்டுத் தலையொரு துண்டமும் அரை முதற் காலளவும் ஒரு துண்டமுமாகி அந்த எண்ணெய்க் கொப்பரையில் விழுந்து மாண்டு போகிறது. இப்படிப் படுவது தான் யமகண்டம்'. எவ்வளவு கொடுமை! கவிகாளமேகம், அதிமதுரக் கவியும் அவர் புலவர் பட்டாளமும் கொடுத்த அனைத்துச் சமிக்கைகளுக்கும் அவர்கள் சொல்லி வாய்மூடும் முன்பே கவிதைகளைப் பொழிந்து தள்ளினான் காளமேகம் அல்லவா? அது கவி மழை பொழியக் கேட்பானேன்? புலவர்கள் எல்லோரும் தலை கவிழ்ந்தனர். ராயன் கவி காளமேகத்தைக் கவியரசாக ஏற்றுப் பெருஞ் சிறப்புச் செய்தான். கவியரசோ புவியரசாம் திருமலைராயனைப் பாட்டில் வைத்துப் பாராட்டினான்.

காளமேகத்தின் பாராட்டு:-

"சீதஞ்செ யுந்திங்கள் மரபின் நீடுபுகழ்
செய்யதிரு மலைரா யன்"
"சாளுவத் திருமலை ராயன்
மந்தர புயனும் கோப்பயன் உதவு
மகிபதி விதரண ராமன்
வாக்கினாற் குபேரன் ஆக்கினன் அவனே
மாசிலா ஈசனு வானே!"
"தெள்ளுபுகழ்ச்
செற்றலரை வென்ற திருமலைரா யன்"
"நாடறியத்
தேடு புகழான் திருமலைரா யன்"
"தேடு புகழ்சேர் திருமலைரா யன்"
"உம்பர்களும்
தேடுநற் சோலைத் திருமலைரா யன்"

எனப் பலபடப் பாடுதலால் காளமேகம் ராயனை எந்த அளவுக்குப் போற்றினான் என்பது பெறப்படும். மன்னனும் மாக்கவியும் அன்பினில் தோய்ந்து பழகினர்.

காலப்போக்கில் திருமலைராயன் காளமேகத்தின் அருமை அறியாது அவமதிக்க ஆரம்பித்தான். ராயன் அற்பச் செயல்களை அந்த அருந்தமிழ்க்கவிக்கு எதிராகச் செய்யத் தலையிட்டான். கவிஞன் மனம் துடித்தான். "எனக்குச் செய்யக் கூடாத செயல்கள் எல்லாம் செய்த திருமலைராயன்..." என்று காளமேகம் வருந்துகிறான். அது மட்டும் அன்று. அவ்வூரில் வாழ்ந்த மக்களைப் புறங்கூறிகள் என்றும்;

வஞ்சகக்காரர்கள் என்றும் வெறுத்துப் பேசுகிறான். இதனால், காளமேகத்திற்கும் ராயனுக்கும் இடையே முரண்பாடு தோன்றுமாறு சிலர் செயல்பட்டிருக்கின்றனர் என்பதும் தெளிவு தன்மானம் மிக்க அந்தக் கவிஞனுக்கு மன்னன் செயலும் மக்கள் செயலும் மலையன்ன கோபத்தை உண்டாக்கி விட்டது. அவன் சீற்றம் மிகக் கொண்டான். திருமலைராயன் ஆட்சிக்கு உட்பட்ட தீயோரை (நல்லவர்களை விட்டுத் தீயோர்களைமட்டும்) அரை நொடிப் பொழுதில் மண்மாரியினால் அழித்து விடுமாறு தன் வழிபடுதெய்வமாம் சிவபெருமானிடம் விண்ணப்பித்துக் கொண்டான். மேலும், திருமலைராயனின் திருநகரில் நாளையே வானமானது மழை இன்றி வெளுத்து மண்மழை பெய்யட்டும் என்று சினந்து வசைகவி பாடினான்.

''செய்யாத செய்ய திருமலைரா யன்வரையில்
அய்யா அரனே அரைநொடியில் — வெய்யதழல்
கண்மாரி யால்மதனைக் கட்டழித்தால் போல்தீயோர்
மண்மாரி யாலழிய வாட்டு''
''கோளர் இருக்குமூர் கோள்கரவு கற்றவூர்
காளைகளாய் நின்று கதறுமூர் - நாளையே
விண்மாரி யற்று வெளுத்து மிகக்கறுத்து
மண்மாரி பெய்கஇந்த வான்''

காளமேகத்தின் சீற்றத்தால் திருமலைராயனின் ஆட்சி அழிவுற்றது. திருநகரில் தீயோர் வாழ்ந்திருந்த பகுதிகளும் அழிவுற்றன. திருமலைராயனின் முடிவு உண்மையில் இரங்கற்குரியதே. ''மண்மாரியால் அவன் அழிந்திருக்கக் கூடுமா?'' என்று ஓர் ஆராய்ச்சிதோன்றக் கூடும். கண்ணகிக்குப் பெரும்பிழை செய்த காரணத்தால் அப்பத்தினி மார்பகம் திருகி மதுரையை எரித்ததாக வரும் சிலம்புச்செய்தியை இங்கு நினைவு வைத்து கொண்டால் சாளுவத் திருமலைராயன் அழிவுற்ற செய்தியும் உண்மையென்று கூறற்கு இடமுண்டு.

இன்று நம்கண்முன் காணும் திருமலைராயன் பட்டினம் அன்று ராயன் ஆண்ட பட்டினத்தின் எஞ்சிய பகுதியின் ஒரு பகுதியே என்று துணியலாம். இப்பொழுது ஊருக்குச் சற்றுத் தள்ளிக் காணப்படும் போலகம் (புகலம் என்பதன் திரிபு) அக்காலத்தில் அனைவர்க்கும் புகலிடமாக அமைந்திருந்த ராயனின் அரண்மனை அமைந்த இடமாகும். இக்காலத்தில் இவ்வூர் திருமலைராயன் பட்டினம் என்னும் பழைய பெயருடன் புதுவை மாநிலத்தைச் சார்ந்த காரைக்கால் மாவட்டத்தின் ஒரு குறிப்பிடத் தக்க ஊராகிக் கவினுற விளங்குகிறது.

# இந்திய விடுதலைப் போரில் மதுரை நிகழ்ச்சி

செ. செல்வின் குமார்

(வரலாற்றுத் துறை, மதுரை- காமராசர் பல்கலைக் கழகம்.)

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில இந்திய மக்களிடை ஓர் அரசியல் விழிப்புணர்ச்சி. பொருளாதாரக் கண்ணோட்டமும் பெருகி இருந்தது. இதன் விளைவாக ஆங்கில ஆட்சி தொடர வேண்டாம் என்ற எண்ணம் வலுத்திருந்த நேரம். காங்கிரஸ் இயக்கம் ஆரம்பத்தில் 'ஓய்வு நாற்காலி' அரசியல்வாதிகள் எனும் மிதவாதிகளோடு தோன்றிடினும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பக் கட்டத்தில் ஒரு மின் முறுக்கேறி தீவிரவாதிகளால் மிடுக்கு நடை போடலாயிற்று. நாளடைவில் வன்முறை இடம் பெறவே புரட்சி மனப்பான்மை பெருகி, பாரதத் தாயை மீட்டே தீருவோம் என மக்கள் முடிவு கொண்டு போராடிடவே சில விபரீதங்களும் நிகழலாயின. இதே காலத்தில் உலகம் இரண்டாம் பெரும் போருக்கு ஆயத்தமாக இருந்தது. இந்தக் கால கட்டத்தில் மதுரையில் காங்கிரஸ் சோசலிஸ்டு இயக்கத்தைச் சேர்ந்த தேசியவாதிகள் மேற்கொண்ட ஓர் வன்முறை முயற்சியே இக்கட்டுரையின் பொருளாகும்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்து ஏழாம் ஆண்டு மே திங்கள் பன்னிரண்டாம் நாள் மதுரை நகரில் திருமலை நாயக்கர் மகாலில் வெள்ளையர்களும் அவர்களைச் சார்ந்த சிப்பந்திகளும் ஒன்று கூடி விழாவொன்றினை விமரிசையாக அமைத்திருந்தனர்[1]. அன்று மாலை ஆறு மணியளவில் திருமலை நாயக்கர் மகாலில் இராமநாதபுரம் மாவட்ட செஷன்ஸ் கோர்ட் அமைக்கப்பட்டிருந்த இடத்தில் விழா ஆரம்பமாயிற்று.[2] இக் கூட்டம் ஒரு மணி நேரம் நடைபெற்றது. இரவு சுமார் ஒன்பது மணியளவில் மகாலின் நுழைவாயிலின்

---

(1) பொதுத்துறை, 1937, பல்வகை, அரசு உத்தரவு எண் 1747, இரகசிய அறிக்கை, பதினோராம் நாள், செப்டம்பர் 1937, பொது அறிக்கையின் சுருக்கம்.

(2) விசேட அறிக்கையின் குறிப்பு. சார்லஸ் பி. கன்னிங்காம், சென்னை மாகாண போலீஸ் மேற்பார்வையாளர், பிரதம காரியதரிசிக்கு எழுதிய கடிதத்தின் உட்கருத்து.

அருகே இருநூற்று ஐம்பது சிப்பாய்கள் உண்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அதன்படி அரைமணி நேரத்திற்குள் உணவு பரிமாறப்பட்டது. எனினும் நள்ளிரவில் விளக்குகளின் அலங்காரம் காணும் பொருட்டாய் பெருமளவில் மக்கள் கூடியிருந்தனர். அவ்வேளையில் சுப்பையா நாயுடு என்பவரும் பெருமாள் செட்டியாரும் 'சப் கோர்ட்' பக்கம் வரலாயினர்.[3] அவ்வேளையில் அவர்கள் வடக்குத் திசையிலிருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் மூவரைக் கண்டனர். உடனே சுப்பையா நாயுடுவும் பெருமாள் செட்டியாரும் "யார் அங்கே?" என வினவ மூவரும் ஓட்டம் பிடிக்கலாயினர். இவற்றிற்குப் பின்னர் பெருமாள் செட்டி வருகையில் தனது காலில் ஓர் மரம் தட்ட, அது என்னவென்று பார்க்கலாயினர். அது ஓர் அலுமினியப் பாத்திரமாகத் தென்பட்டது. எனவே சிப்பாய் எவரேனும் விட்டுச் சென்ற பாத்திரமாக இருக்கலாம் என எண்ணினர். பின்னரே விளக்கின் ஒளியால் அதை ஒரு நாட்டுப்புற வெடிகுண்டு என்பதை அறிந்து கொண்டனர். உடனே காவல் துறைக்குச் செய்தி அனுப்ப, அவர்கள் வந்து வெடிகுண்டினைச் சோதனை போடலாயினர். அச்சோதனையின்போது இவ்வித நாட்டுப்புற வெடிகுண்டு பலத்த சேதம் விளைவிக்க முடியும் என்பது தெளிவாயிற்று[4]. இது குறித்து திரு. ராஜமய்யா என்ற மதுரை அடிசனல் மாவட்ட மாஜிஸ்திரேட்டு வழக்கை நடத்தினார். நாகய்யன், சுந்தர் ராவ், ராமானுஜம் மற்றும் ராஜகோபாலன் என்ற நால்வர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.[5]

தகுந்த நேரத்தில் வெடிகுண்டு மகாலை விட்டு நீக்கப்பட்டதால் பெருமளவில் நடக்கவிருந்த உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டது. இருப்பினும் நாட்டைக் காக்க - விடுதலை பெற மதுரையின் சுதந்திர வீரர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி பெருமுயற்சியாகும். இக்கால கட்டத்தில் 'கம்யூனிச' கலப்புடைய சோசலிஸ்டு அரசியல்வாதிகளின் தீவிர முயற்சிகள் ஏராளம் எற்பட்டதாலும், ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தேழாம் ஆண்டு வரையிலும் எஸ். ஆர். வரதராஜுலு

(3) பொதுத்துறை, பதினோராம் நாள், செப்டம்பர், 1937.

(4) மதுரை போலீஸ் சூப்ரண்டன்டு மாகாண பிரதம போலீஸ் கண்காணிப்பாளருக்கு எழுதிய கடிதம், மே மாதம் 13 - ம் நாள் 1937-ம் ஆண்டு.

(5) இந்து பத்திரிகை, நாள் ஜுலை 19, 1937ம் ஆண்டு.

நாயுடு இவ்வித முயற்சிகளுக்கு உயிரூட்டி வந்தாலும் இந்நாட்டுப்புற வெடிகுண்டு முயற்சிக்கு இவர் காரணமாய் இருந்திருக்க முடியும் என்பதை ஊகிக்கலாம்.[6] இத்தகைய முயற்சிகளை மேற்கொண்ட விடுதலைப் போராட்டச் செம்மல்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இவர்களின் முயற்சி இந்தியச்சுதந்திரப் போராட்டத்தின் உயிரோட்டமான ஒரு நிகழ்ச்சி. இத்தகைய முயற்சிகளின் விளைவால்தான் இந்திய விடுதலை விரைவில் மலர்ந்தது என்பது மறுக்க முடியாத உண்மை.

---

(6) பாலிகா. பி. எஸ்., மதுரை மாவட்ட விவரச் சுவடி, 1960 அரசின் ஆணைப்படி வெளியிடப்பட்டது, சென்னை, P. 85.

## நாட்டுத்தெய்வங்கள்

க. சின்னப்பா எம். ஏ

உலகத்து உயிர்களுக்கெல்லாம் வானம் ஒன்றே. ஒன்றே; பூமி. நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து வட்டமான பூமிக்கு வண்ண முகத்தைக் காட்டும் வெண்ணிலா ஒன்றே. வெண்ணிலாவைச் சுற்றி ஆனால் அதைவிட மிகுதியான உயரத்தில் வானமெங்கும் தாரகைகள். இவ்வாறு வானாகியும், மண்ணாகியும் வளியாகியும் ஒளியாகியும் ஊனாகியும் உயிராகியும் உண்மையுமாய் இன்மையுமாய் இருக்கின்ற இறைவன் ஒன்றே. ஒருயிர்தாங்கி உலகத்தில் உலவுவது ஒரே உடல்-தான் என்பது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை இறைவன் ஒருவனே என்பதுதான் முன்னோர்கள் கருத்து.

ஆன்மீகப் பயிற்சியால் மரணமிலாப் பெருவாழ்வைப் பெற்றவர்கள் சித்தத்தைச் சிவன்பால் வைத்து ஜீவன்முக்தி பெற்றசித்தர்கள். இவர்களின் காலத்தைக் கணிப்பது என்பது பொருந்தாது என்பர் சான்றோர் பலர். சங்க காலத்திற்குப் பிறகு தோன்றி *'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற சித்தாந்தத்தைக் கொள்கையாகக் கொண்டு சித்துக்கள் ஆடிப் புகழ் பெற்றவர்கள் சித்தர்கள் எனப்பெயர் பெற்றனர். 'சித்து' என்ற வடமொழிச் சொல்லுக்கு அறிவு என்பது பொருள். அறிவால் ஆன்மீகப் பயிற்சி பெறும்போது,

†கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம்
    கரடிவெம் புலிவாயையும்
கட்டலாம்; ஒருசிங்கம் முதுகின்மேற் கொள்ளலாம்
    கட்செவி எடுத்தாட்டலாம்;
வெந்தழலின் ரதம்வைத் தைந்துலோ கத்தையும்
    வேதித்து விற்றுண்ணலாம்;
வேறொருவர் காணாமல் உலகத்துலாவலாம்
    விண்ணவரை ஏவல் கொள்ளலாம்

---

*திருமூலர் திருமந்திரம்

தாயுமானவர் தேசோமயானந்தம் 8.

சந்ததமும் இளமையோ டிருக்கலாம்; மற்றெரு
சரீரத்தினும் புகுதலாம்
சலமேல் நடக்கலாம்; கனல் மேலிருக்கலாம்
எண்ணிகரில் சித்திபெறலாம்

என்பார் தாயுமானவசுவாமிகள். எண்ணற்ற சித்துக்கள் கைவரப் பெற்ற இவர்கள் தங்களைத் தேவன் என்று கூறிக்கொள்ளவில்லை. அவர்கள் பெயரில் அவர்களைத் தெய்வங்களாக்கி எங்காவது கோவில்கள் காணப்பட்டால் அதற்கு அவர்கள் பொறுப்பாளிகள் அல்லர். புகழ்பெற்ற பதினெட்டுச் சித்தர்களில் ஒருவரான கொங்கணர், கொங்கணர்ஞானம் எனும் பெயரில் அனுபூதியாகத் தமது அனுபவத்தைக் கூறும்போது

*''கடவுவுளோ ரொருவனுண்டே வேதமொன்றே
காரணசற்குரு தீட்சை தானுமொன்றே
அடைவுடனே யவனருளும் பதிவியொன்றே
யம்புவியின் மனுப்பிறவியான தொன்றே''

என்று உலகத்தில் ஒன்ருனவற்றை கூறும்போது ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதை உறுதிப்படுத்துகின்ருர். அகத்தியர் எனும் பெயரில் வாழ்ந்ததொரு சித்தர்

†'சக்தியே பராபரமே யொன்றே தெய்வம்
சகலவுயிர் ஜீவனுக்கு மதுதானுச்சு' என்றும்
'ஒருவனென்றே தெய்வத்தை வணங்கவேணும்
உத்தமனுய்ப் பூமிதனில் இருக்கவேணும்'

என்றும் அகத்தியர் ஞானத்தில் கூறுகின்ருர்

இதுவரை இறைவனைக் கண்டு சொன்ன ஞானிகள் — அவர்கள் நாயன்மார்களானுலும் ஆழ்வார்களானுலும், வேறு மதத்தினர் என்ருலும் ஒருவனே இறைவன் என்றுதான் உணர்ந்தோதினர். பகுத்தறிவுவாதம் பேசுவோரிலும் ஒருசாரார் மனிதனுக்கு அப்பாற்பட்ட இயற்கைச்சக்தியொன்று உண்டு என்பதை ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

*தமிழ்ச் சரித்திரதீபகம் பக். 115-116.
†அகத்தியர் ஞானம் 9. 1, 4.

ஆனால் இன்றுநாம் வாழும் பகுதியில் நமது மக்களது இறை வழிபாடு எவ்வாறு அமைந்திருக்கிறது? அவர்கள் வணங்கும் கடவுளர்கள் எத்தனை பேர்? நெல்லுவகையையும் பள்ளுவகையையும் எண்ணி வரையறுத்துக் கூறினாலும் நாம் வணங்கும் கடவுளர்கள் இத்தனை பேர்தான் என்று வரையறுத்துக் கூறமுடியுமா? ஆண்கள் பெயரிலும் பெண்கள் பெயரிலும் ஆயிரக்கணக்கான தெய்வங்கள். சங்கிலிச்சாமி, சோணைச்சாமி, இருளப்பசாமி, லாடசன்னாசி, கருப்புச்சாமி, முத்தையா சாமி, பேக்கருப்பன், பெரியகருப்பன். நொண்டிக்கருப்பன், காத்தவராயன், அய்யனார், வீரபத்திரன், காலக்கராயன் என்றும், வள்ளியம்மாள், காத்தாயி, மாரியம்மாள், சுந்தரவள்ளி, முப்பிடாரி, முத்தாலம்மன், மணியக்காள், தொட்டிச்சி, சேலைக்காரி, காளியம்மாள், மந்தையம்மன், நாய்ச்சியார், மாமுண்டி, செல்லாயம்மாள் என்றும் இன்னும் பல பெயர்களில் வணங்கப்படுகின்றனர். ஒருநாட்டு மக்கள் தொகையைக் கணக்கெடுப்பது போல நம்நாட்டுக் குட்டித்தெய்வங்களைக் கணக்கெடுப்போமே என்றால் அப்பெயர்ப்பட்டியல் ஒருநாட்டு மக்கள் தொகைப் பட்டியலைப் போன்றே காணப்படும். இச் சிறு தெய்வங்களின் பெயர்ப் பட்டியலைப் பார்த்தவுடனேயே விரைந்து நம்மால் ஒருமுடிவுக்கு வரஇயலுகிறது. இந்தப் பெயர்களெல்லாம் இன்று நம்மிடையே வாழும் நம்மவர்களின் பெயர்களாகவே அமைந்திருக்கக் காணலாம். மறைந்த நமது முன்னோர்களின் நினைவாக அவர்களது பெயர்களை நமது குழந்தைகளுக்கு இட்டு நமது நன்றியினைப் புலப்படுத்துகின்றோமே! அதுபோல நமது குடும்பத்தில் பிறந்து மறைந்த நமது குடும்பத்துக் குறிப்பிட்ட உறுப்பினர்களுக்குக் கோவில்கட்டி அவர்களைத் தெய்வங்களாக்குவது தொன்றுதொட்ட மரபாக நிகழ்ந்து வந்திருக்கிறது.

*"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்."

என்றார் தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்தவர்களுக்குத் தொன்மைக் காலத்திலேயே தெய்வ வணக்கம் இருந்தது என்பதற்குத் தொல்காப்பியம் சான்று. அது தான் நடுகல் வணக்கம். அந்நடுகல்லின் மீது பீடும் பெருமையும் எழுதிப் பெருமையடைந்தனர். யாருக்கு நடுகல்? 'இன்று எனக்கு நாளை உனக்கு' என்று கல்லறைத்தோட்டம் காட்டிநிற்கிறதே இறந்தவர்களுக்கெல்லாம் பூடம் எனப்படும் பெயரில் பீடம் கட்டி, அது.

*திருக்குறள் 50

போன்று இறந்தவர்கள் எல்லோருக்குமா நடுகல்? நம்மை மறந்தாரை நாம் மறக்காமல் இருக்க வேண்டும் என்பதற்காகவா? அதுதான் இல்லை. விழுப்புண் படாத நாளெல்லாம் இழுக்கு எனக்கருதிப் போரில் புறமுதுகு காட்டாமல் மலர்ந்த மார்பைக் காட்டி யானை ஆயிரம் அமரிடைவென்று வீட்டை மறந்து நாட்டிற்காகத் தனதுஉயிரைத் தானம் செய்கின்றனே- அவனுக்கு நடுகல். அவனுக்குப் பீடும் பெருமையும் பேரும் புகழுமாக அமைகின்றன. அவனது செய்நன்றியைச் சிந்திக்க வேண்டி நன்றிக் காணிக்கைக்காக நடுகல்.

குறிஞ்சித் திணைக்குப் புறனாய வெட்சித்திணைக்கு உரிய துறைகளைத் தொல்காப்பியர் பேசும் போது,

*'காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தல்'

என்று பேசுவார். உரையாசிரியர்கள் இதனைக் கரந்தைத்திணைக்கு உரிய துறை என்றும் கூறுவர். இஃது எத்துறை என்று ஆய்வது நமது நோக்கமன்று. நட்ட கல்லைத்தெய்வமாக்கி வணங்கும் வணக்கம் இருந்தது என்பதற்குச் சான்றுசொல்லவே தொல்காப்பியர் இங்கு வேண்டப்பட்டார். போர்க்களத்துப் பட்டு விண்படர்ந்த காளைக்குக் கல் கண்டமைக்கவேண்டும் என்றால் ஏதாவது ஒரு பட்டியக்கல்லைத்தூக்கிநிறுத்தி நாட்டிவிடுவதா? அந்தக்கல்லைக் கடவுள் என்று வழிபடமுடியுமா? பொதியமலையிலாவது இமயமலையிலாவது கல்கண்டு கொண்டுவர வேண்டும். பொதியமலையில் கல் எடுத்தால் காவிரியாற்றிலும், இமயமலையில் கல் எடுத்தால் கங்கையாற்றிலும் நீர்ப்படை செய்தல் வேண்டும்.

†'ஒற்கா மரபின் பொதியில் அன்றியும்
வில்தலைக் கொண்ட வியன்பேர் இமயத்துக்
கல்கால் கொள்ளினும் கடவுள் ஆகும்
கங்கைப் பேர்யாற்றினும் காவிரிப் புனலினும்
தங்கிய நீர்ப்படை தகவோ உடைத்து'

---

*தொல்காப்பியம்-புறத்திணை இயல் ௬௩

†வஞ்சிக்காண்டம் 117-121.

எனச் சிறப்பதிகாரமாகிய சிலப்பதிகாரம் பேசும். சீர்த்தகு மரபில் பெரும்படைவாழ்த்தல் என்ருல் நட்டகல்லிற்குக் கோட்டங்கட்டி வழிபடுதல் எனப் பொருள். தொல்காப்பியர் காலத்திற்குப் பிறகு சிலப்பதிகார காலத்தில் ஒரு மாற்றம் நிகழ்ந்திருக்கிறது. போரில் விழுப்புண்பட்டு மாய்ந்த வீரர்களுக்கு மட்டும்தான் காட்சி, கால்கோள், நீர்ப்படை நடுகல்' என்ற நிலைமாறி, கண்ணகியைப் போன்ற உரைசால் பத்தினிக்கும் இமயத்துக் கல்லெடுத்து கங்கைப் பேர்யாற்றில் நீர்ப்படை செய்து கனகவிசயர்தம் முடித்தலை நெறித்துக் கோவில்கட்டி வழிபட்டனர் எனத் தெரிகிறது. விழுப்புண்பட்டு மாய்ந்த ஆடவர்கள் எவ்வாறு தெய்வங்களாக மதிக்கப்பெற்றனரோ அதுபோன்று புகழோடு மாய்ந்த பெண்களும் தெய்வங்களாக மதிக்கப்பட்டு வணங்கப் பெற்றனர்.

(தொடரும்)

## குருதிப்புனல்

இரா. இராதாகிருஷ்ணன்

நிலவுடைமைச் சமுதாய மேல் மட்டத்திலிருப்போரின் கொடுஞ்செயல்களைச் சித்திரிக்கிறது இந்திரா பார்த்தசாரதியின் குருதிப்புனல். ஆதிக்க வர்க்கத்தினருக்கும், அடிமைநிலை மக்களுக்கும் இடையில் போராட்டம் நிகழ்கிறது. நிலப்பிரபுவாக வரும் நாயுடு ஒரு பக்கம்; அவரை எதிர்த்துப் போராடும் ராமய்யா, வடிவேலு, பழனி, கனகசபை ஆகியோர் மறுபக்கம். இத்தகு சூழலில் நுழைகின்றனர் இரண்டு இளைஞர்கள்.

எதேச்சையாகக் கிராமப்புறத்திற்குச் சமுதாயவியலில் டாக்டர் பட்டம் பெற்ற கோபாலுக்குப் போராட்டத்தில் ஈடுபடும் நிலை ஏற்படுகிறது. கோபாலைத் தேடிக் கிராமத்திற்கு வரும் சிவாவும் அங்கு நடக்கும் கொடுமைகளைக் கண்டு மனம் நொந்து நசுக்கப்பட்ட மக்களின் சார்பாகக் குரல் கொடுக்கிறான். போராட்டத்தின் கொடுமைகள் உச்சநிலையை அடைகின்றன. குருதிப்புனலில் குளிக்கிறான் கோபால்.

தமிழகத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை மையமாகக் கொண்டு கற்பனை மெருகூட்டி - நாவலாகப் படைத்திருக்கிறார் இந்திரா பார்த்தசாரதி. பண்ணையாட்களின் அவலத்தை நிகழ்ச்சிப் பின்னல்கள் வாயிலாகக் காட்டியிருக்கிறார்.

இந்நாவலில் வரும் இளைஞர்கள் - ஒரு புரட்சிக்குத் தங்களை தயார் செய்து கொண்டு - திட்டவட்டமான முடிவுடன் வந்தவர்களல்லர். கோபாலே இதுபற்றி நினைக்கிறான். ''கண்ணெதிரே பணம் படைத்த பலத்தினால் ஒருவன் அக்கிரமம் செய்ய முயலும்போது, தான் அதை வெறுமனே பார்த்துக்கொண்டு வாளாஇருப்பது நியாயமாகுமோ? வெற்றி அடையும் பக்கம் சாய்வது, இல்லாவிட்டால் செய்கை என்று வரும்போது, அலிகளாய் இருந்து விடுவதுதான் இந்நாட்டு இன்டெலக்சுவல்களுடைய கொள்கைத் தர்மமாய் இருந்து வந்திருக்கிறது. இது சரித்திரம் கூறும் உண்மை''

இந்நிலையை மாற்ற வேண்டும் என்ற உள்ளுணர்வின் உறுத்தலின் வெளிப்பாட்டைக் கோபாலிடம் காண முடிகிறது. டெல்லியிலிருந்து கோபாலைத் தேடிவரும் சிவாவும் புரட்சி மனப்பான்மை

கொண்டவனல்லன். கிராமச் சூழ்நிலை அவனை மாற்றுகிறது. சிவாவைப் பற்றிய கோபாலின் கூற்று இதனைத் தெளிவாக்கும். ''சிவாவைப் பற்றி எனக்கு நன்ருகத் தெரியும். மத்தியதரப் பிராமண குடும்பத்துக்குரிய கோழைத்தனத்தை மனச்சாட்சியாக எண்ணி மயங்குகிறவன்''.

வடிவேலுக்காக நாயுடுவிடம் பேசப் போகும் கோபால் கொஞ்சம் கொஞ்சமாக நிலைமையை உணர்கிருன். கோபால் தாக்கப் படுகிருன். பணபலம் நியாயத்தை நசுக்கிறது. இதனையே கனக சபை, ''இது நாயுடுங்கிற தனி மனிதர் கோபால்ங்கிற தனி மனிதரைத் தாக்கின பிரச்சனை மட்டுமல்ல; வடிவேலுங்கிற வசதியில்லாத ஒரு அப்பாவிக்காக வாதாடப் போனவரை, பொருள் வசதியும் அரசியல் சலுகைகளும் அனுபவிச்சிக்கிட்டிருக்கிற ஒரு அயோக்கியன் தாக்கியிருக்கான். போலீஸ் நியாயம் வழங்கப் போறதுன்னு நானும் நினைக்கலே'' என்கிருர்.

கோபால் என்ற இளைஞனின் உள்ளுணர்வுப் பாதிப்பைக் காட்டுகிருர் இந்திரா பார்த்தசாரதி. தான் அடிபட்ட சந்தர்ப்பத்தைக் கட்சிப் போராட்டத்துக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற ராமய்யாவின் கூற்று அவன் மனத்தில் ஏமாற்ற உணர்வைத் தோற்றுவிக்கிறது. இந்த விவகாரத்தில் தனக்கு ஒரு முக்கியத்துவம் ஏற்பட வேண்டுமென்று தன் உள்ளுணர்வு கூறுகிறதா என்று தன்னைத் தானே கேட்டுக் கொள்கிருன். அவனே, ''ஒரு ஸ்தாபனத்தோடு கொள்கை ரீதியாகப் போராட வேண்டுமென்ற நினைவு சமூக நோக்கு என்ற இலட்சியப் பார்வையின் அடிப்படையில் பிறந்ததல்ல. தனக்கு இழைக்கப்பட்ட சிறுமை என்ற சுயநலத்தில் விளைந்த குறிக்கோளா? தன் அண்ணன் அரசாங்கத்தால் கொல்லப்பட்டது கண்ட லெனினின் கோபந்தான், ரஷ்யப் புரட்சிக்குக் காரணம் என்று சர்ச்சில் கூறியிருப்பது நினைவுக்கு வருகிறது'' என்கிருன். தனி மனித உள்ளுணர்வுத் தாக்கத்தை ஈண்டு பெற முடிகிறது.

தன்னைத் தேடிவரும் சிவாவின் மனப்போக்கு கோபாலுக்கு வியப்பைத்தருகிறது. எதிலும் ஒதுங்கியிருக்கும் இண்டலக்சுவல் என அவனைப்பற்றித் தான் கணித்த கணிப்பு தவருனது என உணர்கிருன். கிராமத்தில் நடக்கும் சம்பவங்கள் சிவாவின் ஆத்திரத்தைத் தூண்டி விடுகின்றன. ஒரு அறிவியல்வாதியான சிவா இப்படிப் பேசுவது கோபாலுக்கு ஆச்சரியமளிக்கிறது. சிவா கூறுகிருன்: ''டெகார்ட்டே

கணக்கிலே சூரப்புலி. டார்வின் சயன்டிஸ்ட். டெகார்ட்டோட பதினெட்டாம் நூற்றாண்டு கார்ட்டீஷியன் இன்டெலக்டுக்கும் டார்வினோட பத்தொன்பதாவது நூற்றாண்டு வில்' (wil)லுக்கும் ஏற்பட்டிருக்கிற மோதலுக்குத்தான் நாம வாரிசா இருக்கோம். உணர்ச்சியே இல்லாத கொடூரமான தர்க்கத்தை வச்சிண்டு மாளிகை கட்டறது சரியா, இல்லாட்டா இப்போழுதைய பிரச்னைக்கு இந்த உணர்ச்சி வயப்பட்ட நிலையிலேயே தீர்வு காணறது சரியா? ...... ஐ வான்ட் டு கில் தட் பாஸ்டர்ட் நாயுடு"! சிவா என்ற இளைஞன் சம்பவங்களால் பாதிக்கப்படுகிறான். இளைஞன் சிவாவின் இந்த ஈடுபாட்டை டாக்டர் கனகசபை பாராட்டுகிறார். இளைஞர்களின் "இன்வால்வ்மெண்ட்" இந்த நாட்டிற்கு நம்பிக்கை ஒளியூட்டும் எதிர்காலத்தைத் தரும் எனத் திடமாக நம்புகிறார் டாக்டர் கனகசபை.

கோபால், சிவா இருவரும் இளைஞர்கள். ஆனால் கோபால் தனது உணர்ச்சிச் செறிவின் நெகிழ்ச்சிக்குத் தேவையான ஒரு விடுதலைக் குறியீடாகப் பங்கஜத்திடம் உடலுறவு கொள்ள விழைகிறான். இதற்கு நேர்மாறான மனப்பான்மை கொண்ட இளைஞனாக உள்ளான் சிவா. இருவருக்குமிடையே எழும் உரையாடல் இதனைத் தெளிவுபடுத்தும்.

> "உன் பிரச்சனை என்ன?" என்று கேட்டான் சிவா.
> "என் மன எரிச்சலுக்கு விடுதலை வேண்டும். விடுதலையைத் தருவன இரண்டு. ஒன்று, சிரிப்பு. இரண்டு, செக்ஸ்"

"சிரித்துவிடு. பிரச்னையே இல்லை." என்றான் சிவா. கோபால் புன்னகை செய்தான். "உன்னுடைய திருவாரூர் அனுபவத்தைப் பற்றி நீ சொல்லவே இல்லை" என்றான் சில வினாடிகளுக்குப் பிறகு.

"மை டியர் மான், யு ஹாவ் பிகம் கிரேஸி" என்று சொல்லிக் கொண்டே எழுந்தான் சிவா.

பங்கஜத்தோடு கோபால் கொள்ளும் பாலுறவும் இக்கருத்துக்கு அரண் செய்கிறது. சிவாவிடம் இருக்கும் கட்டுப்பாடு கோபாலிடம் இல்லை. ஏட்டுப் படிப்பை விட அனுபவந்தான் ஒருவனுக்குச் சரியான ஆசிரியன் என்பதனைச் சிவாவிடமிருந்து பெற முடிகிறது.

கோபாலிடம் உள்ள பலவீனம் சிவாவிடம் இல்லாததால் கோபாலைவிடச் சிவாவை நம்புகின்றனர் கிராமமக்கள். இருவருமே தலைவனாக வேண்டும் என்ற அரசியல் நோக்கத்தோடு அந்தக்

கிராமத்துக்கு வரவில்லை. ஆனால் தருணங்கள் அத்தகைய ஒரு சூழலைக் கொடுத்தன. தனிப்பட்ட மனித பலவீனங்கள் கோபால்—சிவா இருவரையும் பிரித்துக் காட்டுகின்றன. இந்த வேறுபாடு இந்திரா பார்த்தசாரதியின் இளைஞர்களை வேறுபடுத்திக் காட்டுகிறது.

நாயுடுவின் தாயை மனிதாபிமானத்தோடு காப்பாற்ற வேண்டும் என வாதிடுகிறான் சிவா. கோபாலோ தன் கருத்தை வலியுறுத்திச் சொல்லும் நிலையில் இல்லை. நாயுடுவின் தாயைக் காப்பாற்றியதைக் கண்டிக்கிறார் சுந்தரவதனம். பொதுப்போராட்டம் என்ற நிலையில் தனிப்பட்ட உயிருக்கு மனிதாபிமானம் என்பதெல்லாம் அசட்டுத்தனம் என்கிறார் அவர். ஆனால் சிவாவால் அதைச் சீரணிக்க முடியவில்லை. அவனே ''நீங்க சொல்றது தர்க்கரீதியாக நியாயமாக எனக்குப் பட்டாலும், நான் வளர்ந்திருக்கக்கூடிய சூழ்நிலையினால் எனக்கு ஏற்படக்கூடிய மனோதத்துவ அமைப்பு, நீங்க சொல்றதை ஏத்துக்கத் தயங்குகிறது'' என்கிறான்.

பொதுப்போராட்டம் என்ற நிலையிலும் சிவாவின் மனோதத்துவ அமைப்பில் மாற்றம் இல்லை. வளர்ப்பு மனிதனை நிர்ணயிக்கும் காரணியாகிறது.

கோபால் போராட்ட இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாலும் திட்டமிட்டுச் செயல்படும் பக்குவமடைந்தவனாக நாவலில் காட்டப்படவில்லை. கன்னையா நாயுடு, கிருஷ்ணசாமி நாயுடு-வின் வீட்டில் தங்கியிருக்கிறார் என ஐயப்பட்டதுமே அதற்கான ஏற்பாடுகளுடன் சென்றிருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யாமல் தனியே போகும் தவற்றைச் செய்கிறான். அடுத்துப் பங்கஜத்தின் வாயிலாகச் சில காரியங்களை இயக்கத்தின் நன்மைக்காகச் செய்-யலாம் எனக் கணிப்பதும் தவறுகிறது. அவனே தன்னைப் பற்றி "ஆரம்பத்திலிருந்தே நான் தப்புக்கு மேல் தப்பாகச் செய்துகொண்டு வருகிறேன். ஓர் இயக்கத்தை நடத்துவதற்கு வேண்டிய பக்குவமான அனுபவமோ, பொறுமையோ எனக்கில்லை என்கிறான்.

இரண்டு இளைஞர்களிடமும் சமுதாயப் பிரச்சினைகளின் தாக்கம் இருந்தாலும், அத் தாக்கத்தின் வெளிப்பாடு வேறுபட்ட, நிலைகளில் இருப்பதை நாவலில் காண முடிகிறது. பிராய்டியக் கருத்துக்களையும், மார்க்ஸீயக் கருத்துக்களையும் 'குருதிப்புனலின்'

கதைப் பின்னலோடு இழையோடச் செய்திருக்கிறுர் நாவலாசிரியர். இளைஞர்களின் செயற்பாட்டில் குறைபாடுகள் தென்பட்டாலும்; அவை இயல்பானவையாகக் காணப்படுவதால் அவற்றைக் கதைப் பின்னலின் பலவீனமாகக் கொள்வதற்கில்லை. நாட்டு நடப்புகள் படைப்பாளனைப் பாதிக்கும்பொழுது அது சில வடிவங்களில் வெளிப்படலாம். சிறுகதையாகவோ, நெடுங்கதையாகவோ, கவிதையாகவோ உருவம் கொள்ள வாய்ப்பேற்படுகிறது. நிகழ்ச்சிகளின் எண்ணப்பதிவு இந்திராபார்த்தசாரதியிடம் நாவலாக வடிவெடுத்துள்ளது.)

இந்திராபார்த்தசாரதி தமிழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை உய்த்துணர்ந்திருக்கலாம். ''உணர்வு நிலைப்பட்ட கற்பனை அனுபவங்கள், படைப்பில் வெளிப்படும் புனை கதைகள் மனிதர்களின் செயற்பாட்டையும், போராட்டங்களையும் காட்டுவன. எனவே அவை நேரடியாகவோ, மறைமுகமாகவோ கருத்துக்களை வெளியிடத்தான் செய்யும்'' என்னும் டக்ளஸ் ஏ. ஹக்ஸின் கருத்து இங்கு உணரத்தக்கது.

பல்கலைக் கழகத் துணைவேந்தர்

# டாக்டர். வ. சுப. மாணிக்கம்

——oOo——

மதுரைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகப் பதவி ஏற்றிருக்கும் டாக்டர். வ. சுப. மாணிக்கம் அவர்கள் தமிழ் உலகிற்கு நன்கு அறிமுகமானவர்கள். பன்மொழிப்புலவர் தெ. பொ. மீ தமிழறிஞர் மு. வ ஆகியோர் பணி புரிந்த இடத்தில் பாரம்பரியமாகத் தமிழ் பயின்று, எழுத்து வன்மையாலும், சிந்தனைத் திறத்தாலும் இலக்கிய உலகில் நீங்காத இடம் பெற்றிருக்கும் இத்தமிழறிஞர் பணி புரிய வந்திருப்பது பல்லாற்றானும் மகிழ்ச்சி தரும் செய்தியாகும். பண்டிதமணி, நாவலர் ந மு. வே. நாட்டார் ஆகியோரிடம் தமிழ் பயின்ற டாக்டர் வ. சுப. அவர்கள் நம் தமிழ்ச்சங்கத்தின் பால் ஈடுபாடு கொண்டவர்கள் அவர்களைத் துணைவேந்தராகப் பதவியில் அமர்த்திய தமிழக அரசினை மனமுவந்து பாராட்டுகிறோம்.

# செய்திக் கதிர்

## தமிழ் எழுத்தாளருக்குப் பரிசும் பாராட்டும்

அனைத்து இந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் மாநாடு ஜூன் முதல்வாரத்தில் சென்னையில நடைபெற்றது. தமிழ்த் தென்றல் திரு. வி. க. வின் பெயரால் ஆண்டு தோறும் ரூபாய் பத்தாயிரம் பரிசுத்தொகை சிறந்த தமிழ் எழுத்தாளருக்கு வழங்கப் பெறும் என்று செய்தி அமைச்சர் திரு. வீரப்பன் அறிவித்தார். விழா நிகழ்ச்சிகளின் நிறைவு நாளில், எழுத்தாளர் பெரியசாமித் தூரன் ஜெகசிற்பியன் ஆகியோருக்குக் கேடயங்கள் வழங்கப்பட்டன. காலஞ்சென்ற ஜெகசிற்பியனுக்குப் பதிலாக அவரது குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் கேடயத்தினைப் பெற்றுக் கொண்டார். இந்த ஆண்டுக்குரிய பரிசுத் தொகையான 10000/-ரூபாய் ஜெகசிற்பியனுக்கு என்றுஅறிவிக்கப்பட்டது, சலுகைக்கட்டணத்தில் அரசுப் பேருந்துகளில் தமிழ் எழுத்தாளர்கள்பயணம் செய்யலாம் என்று அமைச்சர் அறிவித்தார். ஆனால் இந்தத்தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் உறுப்பினராக உள்ளோருக்கே இச்சலுகை என்று கூறியது பொருத்தமாகப்படவில்லை. பயணச் சலுகைஎன்பது மகிழ்ச்சிதரும் செய்திதான். ஆனால் இச்சிறு சலுகையின் மூலம்சுதந்திரமான எழுத்துலகச் சிற்பிகளைக் குறிப்பிட்ட ஒருவட்டாரத்துக்குள் அடைப்பது எவ்வகையிலும் ஏற்புடைத்தாகத் தெரியவில்லை.

## சென்னையில் அமெரிக்கத் துறவியார்

பற்பல அமெரிக்க நகரங்களில் இந்து ஆலயங்கள் தொடர்ந்து கட்டப்பட்டு வருகின்றன. அங்குசென்று பூசாரிகளாகப் பணியாற்ற விரும்புவோருக்கென்று சென்னையில் ஒரு பயிற்சி நிலையம் துவங்கப்படும் என்று அமெரிக்காவின் ஹவாய் மாநிலத்தைச் சார்ந்த தவத்திரு. சுப்பிரமணிய சுவாமிகள் இங்கு அறிவித்தார். அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியில், டாக்டர். பா. நடராசன் ஆங்கிலத்தில் பெயர்த்தெழுதிய திருமந்திரம்-முதல் தொகுதி பன்றிமலை சுவாமிகளால் வெளியிடப்பட்டது. மேலும் வெளிவரவிருக்கும் பதினொரு தொகுதிகள் உள்ளிட்ட அனைத்து வெளியீடுகளையும் அமெரிக்காவில் பரப்புவது தமது சங்கத்தின் பணிகளில் ஒன்றாக இருக்கும் என்று தவத்திரு. சுவாமிகள் குறிப்பிட்டார்.

தவத்திரு. சுப்பிரமணிய சுவாமிகள் 1927-இல் கலிபோர்னியாவில் பிறந்தவர். 1949-ல் ஹவாய் நகரத்தில் சைவசித்தாந்த சபை ஒன்றினை நிறுவி இந்து மதப் பணி புரிந்து வருகிறார். தமது

இலங்கைச் சீடரான சுவாமி ஆனந்தாவுடன் சென்னைக்கு வந்திருந்த இவர், ஹாவாய், ஸான் பிரான்சிஸ்கோ, நெவாடா, நியூயார்க் போன்ற அமெரிக்க நகரங்களில் சிவாலயங்கள் கட்டப்பட்டுள்ளன என்றும் அறிவித்தார்.

ம. பொ. சிக்கு டாக்டர் பட்டம்

சென்ற ஜுன் திங்கள் மூன்றும் வாரத்தில் தமிழ் நாடு மேலவைத் தலைவரான தமிழ் அறிஞர் ம. பொ. சிக்கு 74-வது பிறந்த நாள் விழா சென்னையில் கொண்டாடப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் விழாவில் கலந்து கொண்டு வாழ்த்தியதோடு, ம. பொ. சி. எழுதிய மூன்று தமிழ் நூல்களையும் வெளியிட்டார். அவற்றுள் ஒரு நூல் மதுவிலக்கு பற்றி ம. பொ. சி-யால் எழுதப்பட்டதாகும். ம. பொ. சி. க்கு கௌரவ டாக்டர் பட்டம் ஒன்றும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்று முதலமைச்சர் அறிவித்தார். பேச்சாற்றலும் எழுத்து வன்மையும் கொண்ட ம. பொ. சி அவர்களைப் பாராட்டுவது பொருத்தமே. ஆனால் வாழ்நாள் முழுதும் ஆங்கிலமொழியினைப்'பரங்கியர் மொழி'என்றுபழித்தும் இழித்தும் என்று கூறி அம்மொழியினை வசைபாடித் தீர்த்தவர் ம. பொ. சி. ஆங்கில மொழியினாலும் அருந்தமிழ்க்குச் சில நன்மைகள் இருந்தன என்பதைக் கொஞ்சமேனும் கருதாது. காலமெல்லாம் ஆங்கிலத்தைத் திட்டியவர் ம. பொ. சி. டாக்டர் என்பது ஆங்கிலச் சொல், எனவே அவருக்குக் கொடுக்க இருக்கும் பட்டத்தைத் தமிழக அரசு 'டாக்டர்' என்று கொடுக்காமல், வேறு தூய தமிழ்ச் சொல்லால் இதனைக் குறிப்பிட்டுக் கொடுக்கலாம். 'பண்டாரகர்' என்று இதனைக் குறிப்பிடுகிறார்கள். "மூல பண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினோ "என்பதும் தேவாரம் அல்லவா? எனவே பண்டாரகர் ம. பொ. சி என்று அழைப்பது பொருத்தமாக இருக்குமா என்று அரசு சிந்தித்துப் பார்ப்பது நல்லது.

தமிழ் ஆசிரியர்க்கு வானொலி நிகழ்ச்சிகள்

மாநிலமெங்கணும் உயர்பள்ளிகளில் பணிபுரியும் தமிழ் ஆசிரியர்க்கென்று வருகிற செப்டம்பர் திங்கள் முதல் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் சிற்சில நிகழ்ச்சிகள் வானொலியில் இடம் பெறும் என்று தெரிகிறது ஏறத்தாழ ஐயாயிரம் தமிழாசிரியர்கள் இதனால் பயனடைவர். அவர்களின் பணிநிலையும், தாமும் உயர்வதற்கேற்ற முறை

யில் இவ்வானொலி நிகழ்ச்சிகள் அமையும் மாநிலக்கல்வி ஆய்வுக் குழுவினர், நடுவண் அரசின் இந்திய மொழிகள் நிறுவனம், அகில இந்திய வானொலி, சென்னையில் உள்ள உலகத்தமிழ் நிறுவனம் ஆகிய நான்கு அமைப்புகளும் சேர்ந்து வானொலிப் பாடங்களையும், நிகழ்ச்சிகளையும் ஆயத்தப்படுத்தி வருகின்றனர். மகிழ்ச்சிக்குரிய செய்தி தான். ஆனாலும் ஆயிரக்கணக்கான தமிழ் ஆசிரியர்களை உறுப்பினராகக் கொண்டிருக்கும் மாநிலத் தமிழாசிரியர் கழகத்தையும் கலந்து ஆலோசித்திருக்கலாம் என்று எமக்குப்படுகிறது.

### போர் முரசு கொட்டிய சொல்லேர் உழவர்கள்

மயிலை ஏவி. எம். திருமண மண்டபம் மகிழ்ச்சி பொங்கும் மண மக்களைத்தான் அதிகமாகக் கண்டிருக்கிறது. குமுறுகின்ற இடியாகவும், கொந்தளிக்கும் கடலாகவும் தமிழ்எழுத்தாளர் பட்டாளம் ஒன்றுசேர்ந்து போர்க்கோலம் பூண்ட காட்சியைச் சென்ற திங்களில் அங்கே காண முடிந்தது. எழுத்தாளர் மாநாட்டைத் தொடங்கி வைத்துச் சொற்பெருக்காற்றியவர் மாநில ஆளுநர் பட்வாரி அவர்கள். எழுத்தாளர்கள் தாங்களே ஒரு கட்டுப்பாடு வகுத்துக் கொண்டு ஆபாச எழுத்துகளைத் தவிர்கக வேண்டும் என்று குறிப்பிட்டார். ''கதையோ கட்டுரையோ எதுவாயினும் ஒரு பெண் தனது பெற்றோருக்கு முன் கூச்சமின்றிப் படிப்பதற்கு ஏற்ற முறையில் அமைய வேண்டும்'' என்ற அவர்தம் உள்ளத்தைத் தொடுவதாக அமைந்திருந்தது. 'எழுத்தை வாணிபமாகக் கருதாதீர்கள்' என்ற கு. ராஜவேலுவின் வேண்டு கோளும், ''எழுத்தாளர்கள் துரியோதனர்கள் என்றால், ஓவியர்கள் துச்சாதனர்களாக மாறித் தங்கள் படங்களில் பெண்களைத் துகில் உரித்து வரைகிறார்களே'' என்ற சு. சமுத்திரத்தின் அனுதாபக் குரலும், ''நிறைய பத்திரிகைகள் குழந்தைத்தனமாகவே இருக்கின்றன'' என்ற நா. பார்த்தசாரதியின் கிண்டலும் பாராட்டத்தகுந்தன.

சமூகத்தின் கறை படிந்த சாக்கடைப் பகுதியில் மூழ்கி எழுந்து தங்கள் கருத்து வளத்தையும் கற்பனைத் திறனையும் அங்கிருந்தே பேறு முனைக்குக் கொண்டு வரும் தமிழகத்தின் சிற்சில ''முற்போக்கு எழுத்தாளர்கள்'' அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டதாகவே தெரியவில்லை. காதல் உணர்ச்சிகளைக் காட்டுவதற்கும் ஒரு பக்குவம் உண்டு. புகழுக்குக்காகவும், பொருளுக்கென்றும் திரை மறைவு நிகழ்ச்சிகளைத் தெருக்கூத்தில் ஏற்றுகின்ற இழிசினர் செயல் இன்றைய தமிழ் எழுத்துகளில் சற்று அதிகமாகவே இருப்பது உண்மைதான். இந்த விரச-

மானபோக்கினைத் தமிழ்ப்பத்திரிகைகளில் விற்கின்ற எழுத்தாளர் பலர் பெண்களின் பெயரில் எழுதுவதுதான் விந்தையிலும் விந்தை. இதனைக் காலத்தால் கண்டித்த தமிழ் எழுத்தாளர்களை மனமாரப் பாராட்டுகிறோம். தமிழ் நாட்டில் வெளியாகும் வார, மாத இதழ்களின் வெளியீட்டாளர்களும் ஒன்று கூடித் தங்களுக்குள் ஒரு நியதியினை வகுத்துக் கொண்டு அட்டைப்படங்களில் ஆரணங்குகளைப் பல்வேறு கோணங்களில் போட்டு கெட்டுக் கொண்டிருக்கும் இளைஞர் சமுதாயத்தை மேலும் குட்டிச்சுவராக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறோம்.

## தமிழ் அறிஞர்கட்கு ஊதிய உயர்வு

வயது முதிர்ந்த நிலையில் போதிய வருவாய் இல்லாதிருக்கும் தமிழ் அறிஞர்கட்கு மாநில அரசு திங்கள் தோறும் கொடுப்பதாக இருந்த நூறு ரூபாய்களைத் தற்போது இருநூற்று ஐம்பதாக உயர்த்தியிருக்கிறது. சென்ற ஜனவரித் திங்கள் முதற்கொண்டு இது நடைமுறைக்கு வந்ததாகக் கணக்கிடப்படும். இத் திங்கள் ஊதியத்தைப் பெறும் தமிழறிஞர் குழாத்துள், மயிலை, சீனி, வேங்கடசாமி, சுரதா தாரண. துரைக்கண்ணன், முகமது செரீப். பி. ஸ்ரீ. ஆச்சார்யா. போன்றோர் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். விளம்பரமின்றித் தன்னடக்கமாக இருக்கும் தமிழறிஞர் யாரேனும் இந்தப்பட்டியலில் விடுபட்டுப் போயிருக்கின்றனரா என்று பார்ப்பதோடன்றி, அப்படி இருக்குமாயின் அவர் தம்மையும் இத்திட்டத்தில் கொண்டு வந்து இம் மாத ஊதியம் வழங்கச்செய்வது தமிழக அரசின் கடமையாகும்.

# சங்கச் செய்திகள்

1979 – ஆண்டு மே - திங்கள் மூன்றும் நாள் நிகழ்ந்த தமிழ்ச் சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் மதுரைப் பல்கலைக்கழகப் பகுதியில் தமிழ் பயிலும் கல்லூரி மாணவர்களை ஊக்குவிப்பதற்கான இரண்டு தீர்மானங்கள் கீழ் வருமாறு :

| | | |
|---|---|---|
| (1) | தமிழ்ச்சங்க நிறுவனர் வள்ளல் பாண்டித்-துரைத்தேவர் நினைவு அறக் கட்டளை நிறுவுதல் | மதுரைப் பல்கலைக் கழகத்தில் மதுரைத் தமிழ்ச் சங்க நிறுவனர் வள்ளல் பாண்டித்துரைத் தேவரவர்கள் நினைவு அறக கட்டளை ஏற்படுத்துவது என்றும் அதன் மூலம் மதுரைப் பல்கலைக்கழகத்தில் முதுகலைத் தமிழில் முதல் மாணவராக வெற்றி பெறுபவர்க்குத் தங்கத் தோடா பரிசளிப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. |
| (2) | மாட்சிமை தங்கிய மன்னர் பாஸ்கர சேதுபதி அவர்கள் பெயரில் ரொக்கப் பரிசளிப்பது | மதுரைப் பல்கலைக் கழகத்தில் இளங்கலை சிறப்புத் தமிழில் முதல் வகுப்பில் தேறி பல்கலைக் கழகத்தில் முதல் மாணவராக தேர்வு பெறும் மாணவருக்கு தமிழ்ச் சங்கச் சார்பில் மன்னர் பாஸ்கர சேதுபதி நினைவுப் பரிசாக ரூ 500/. ரொக்கப் பரிசாக அளிப்பதாகத் தீர்மானிக்கப் பட்டது. |

## "செந்தமிழ்" ஆசிரியர் குழு.

பேராசிரியர் டாக்டர். சுப. அண்ணாமலை, எம். ஏ., பி. எச்டி.,
முதல்வர், தியாகராசர் கல்லூரி, மதுரை-625009.

பேராசிரியர் டாக்டர். கோ. விஜயவேணுகோபாலன், எம்.ஏ., பி.எச்டி.,
மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை-625021.

பேராசிரியர் பழனி. அரங்கசாமி, எம்.ஏ., பி.ஓ.எல்.,
அஞ்சல் வழிக் கல்வித்துறை, மதுரைப் பல்கலைக்கழகம்,
மதுரை-625021.

உரையாசிரியர் புலவர். இரா. இளங்குமரன்
தமிழாசிரியர், மு.மு. உயர்நிலைப்பள்ளி,
திருநகர், மதுரை-625006.

**ஆசிரியரும் வெளியிடுபவரும் :**

**டி. பி. எம். பெரியசுவாமி, எம். எல். ஏ.,**

**செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 625001.**

---

முகவரி:

ஆசிரியர்,
—செந்தமிழ்—
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
54-தமிழ்ச் சங்கச்சாலை — மதுரை - 1.

---

மணியம் பிரஸ், மதுரை—9